உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
22 JUN 1940
TANJORE

துணர் ௰௬ { விக்கிரம—ஆனி } மலர் ௩


| | | |
|---|---|---|
| ௧. | மெய்ப்பாட்டியல் | 81 |
| | திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L., | |
| ௨. | காட்சியளவை | 89 |
| | திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் B. A. (Lond) | |
| ௩. | கலிங்கப்போரும், காலிங்க வீரரும் | 95 |
| | திரு. ஈ. ஆர். நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L. | |
| ௪. | கலைச் சொல்லாக்கம் | 102 |
| | திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B.A., L.T. | |
| ௫. | காரைக்கால் அம்மையார் கணவன் நிலை | 104 |
| | திரு. அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் M.A. | |
| ௬. | வாழ்க்கைச் சித்திரமே இன்பச் சித்திரம் | 113 |
| ௭. | தமிழ்ச்செய்திகள் | 116 |
| ௮. | நன்கொடைகள் | 120 |
| | பொழிற்றெண்டர் | |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் யசு | விக்கிரம—ஆனி | மலர் ௩ |
| --- | --- | --- |

உ

## மெய்ப்பாட்டியல்

திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L. பசுமலை.

(முற்றொடர்ச்சி: துணர் 16, மலர் 2, பக்கம் 48.)

சூத்திரம் **22.**

இன்பத்தை வெறுத்த றுன்பத்துப் புலம்ப
லெதிர்பெய்து பரித லேத மாய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்த
லுண்டியிற் குறைத லுடம்புநனி சுருங்கல்
கண்டுயின் மறுத்தல் கனவோடு மயங்கல்
பொய்யாக் கோடன் மெய்யே யென்ற
லையஞ் செய்த லவன்றம ருவத்த
லறனளித் துரைத்த லாங்குநெஞ் சழித
லெம்மெய் யாயினு மொப்புமை கோட
லொப்புவழி யுவத்த லுறுபெயர் கேட்ட
னலத்தக நாடிற் கலக்கமு மதுவே.

கருத்து :—இது மேற் கூறிய வாராவிடத்து நேரும் வேறு சில மெய்ப்பாடுகளை உணர்த்துகிறது.

பொருள் :—இன்பத்தை வெறுத்தல் முதல் கலக்கம் ஈறாக எண்ணப்பட்ட இருபதும் அன்புத்திணையில் தனிப்படர் மெலிவின் துனி நனி விளக்கும் மெய்ப்பாடுகளாகும்.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசை, 'கலக்கமும்' என்பதன் உம்மை முன் ஒவ்வொன்றோடும் பிரிந்து சென்று ஒன்றும் எண்ணிடைச்சொல்; அன்றி எச்சம் எனினும் சிறப்பெனினும் தவறாகாது.

இனி, இதில் 'இன்பத்தை வெறுத்தலாவது தனிப்படர் மெலியுங் காதலர் கூட்டத்தின் முன்னும், உடனுறைபொழுதும் தமக்கினிதாய வற்றையே, தனித்தவழி வெறுக்குங் குறிப்பு, நிலவு, தென்றல், ஆரம், மலர்மாலை, கண்ணி முதலிய இன்பப் பொருள்கள் பிரிவாற்றாமையால் துன்பத்திற்கேதுவாதல் இம் மனவியல் பற்றியதாகும். தனித்தவர் இவற்றை வெறுத்துப் பழிக்கும் துறையில் வரும் செய்யுட்கள் பலவாதலின் ஈண்டு அவற்றைக் குறித்தல் வேண்டா.

'துன்பத்துப் புலம்பலாவது தனிமை தாங்காக் காதலர் படர் மெலிந்திரங்கலாகும்.

"கரத்தலு மாற்றேனிந் நோயை, நோய்செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும்."
"காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்"

எனும் குறள்கள் படர்மெலிந்திரங்கற் பாட்டுக்களாகும்.

'எதிர்பெய்து பரிதல்' என்பது உருவெளிக்கிரங்குதல்.

"வானம்பாடி வறங்களைந் தானாது
அழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கி யோயே"—(ஐங்குறு நூறு. 418)

என்னும் ஐங்குறு நூற்றுப் பேயனார் முல்லைப் பாட்டில் சுரத்திடைத் தலைவன் தலைவியின் உருவெளி கண்டு நயந்ததைப் பின் அவளிடம் கூறுதலறிக.

'ஏதல், ஆய்தல்' என்பது, கூட்டத்திற்கு இடையூறும் குற்றம் பலவும் ஆராய்தலாம். ஆற்றிடைத் தலைவன் கூற்றினுக் கழுங்கல்; பிரிந்தவர் மறந்து துறந்தனர் கொல்லெனத் துயரல்; ஏதிலர் வரைவின் தீதினை யஞ்சல்; போல்பவை யெல்லாம் இதன் பாலடங்கும்.

"......................................பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே" (குறுந். 268)

எனும் சேரமான் சாத்தன் குறும்பாட்டும்,

" இரவு நீ வருதலின் ஊறும் அஞ்சுவல் " (ஷை. 217)

எனும் தங்கால் முடக்கொல்லனார் குறும்பாட்டடியும் இடையூறு படூஉம் ஏதம் ஆய்தலாகும்.

" ...........................அன்னோ
மறந்தனர் கொல்லோ தாமே? களிறுதன்
உயங்கு நடை மடப்பிடி வருத்தம் நோனாது
.....................................
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை அழப்பிரிந்தோரே " (குறுந். 307)

எனும் கடம்பனூர்ச் சாண்டிலியன் குறும்பாட்டடிகள் பிரிந்தார் மறந்தனர் கொல்லென வருந்துதல் குறிக்கும்

" பிரிவெண்ணி பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல்? வயங்கிழாஅய்! வலிப்பல் யான்கேஎளினி" (கலி.11)

எனுங் கலியடியுமதுவேயாம்.

'பசியட நிற்றல்' ஆவது ஆற்றாமையால் ஊண் உவர்த்து, பிறரை அடும் பசிப்பிணியை அறவே தான் அடும் ஆற்றல்.

" இனியான், உண்ணலும் உண்ணேன், வாழலும்வாழேன்
தோணலமுண்டு துறக்கப்பட்டோர், வேணீருண்ட
குடையோரன்னர் " (கலி. 23)

எனுங் கலியடியும்,

" ...............நின்மகள்
பாலுமுன்னாள் பழங்கண் கொண்டு
நனி பசந்தனள் என வினவுதி " (அகம். 48)

எனும் அகப்பாட்டடிகளும் பசியடும் காதலியல் குறித்தல் காண்க.

'பசலை பாய்தல்' ஆவது கூட்டம் பெறாது ஆற்றாத் தலைவியர் காதல் நோயால் தம்மாமைக் கவின் அழிந்தெய்தும் நிறவேறுபாடு.

" யாங்கு வல்லுநையோ ஓங்கல் வெற்ப!
இரும்பல் கூந்தற் றிருந்திழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ " (ஐங்குறு. 231)

" எனக்குமாகாது என்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டும்
திதலை யாகத்தன் மாமைக் கவினே " (குறுந்தொகை. 27)

இவை பசலை பாயும் காதலியல்பு குறிப்பனவாகும்.

'உண்டியிற் குறைதல்' ஆவது, உற்றார் ஊட்டும் உணவை மறுப்பில் கடுப்பரென்றஞ்சி, தன் வெறுப்பை மறைத்துக் கொண்டதுபோற் சிறிது உண்டுவைத்தல், முன் பசியடநிற்றல், தனிப்படர் மெலிவால் பசிப்பிணி யுணராத காதல்நிலை குறிக்கும்; இது, ஆனுக்காதலின் ஊண் ஒல்லாமையால் பண்டையளவின் உண்டி சுருங்குதலைச் சுட்டும். "தீம்பாலூட்டினும் வேம்பினும் கைக்கும்" (இ. வி. ப. 537) எனும் பழைய பாட்டடி இவ்வியலை விளக்குவதறிக.

'உடம்புநனி சுருங்கல்' என்பது, உணவில்லாமையும் தணப்பொல்லாமையும் நலிய, உடல்நாளும் மெலிதல்.

"யாமெங் காதலற் காணே மாயில்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்லவில் லாகுதுமே" (குறுந்தொகை 290)

"ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங் கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே" (நற்றிணை 284)

என இவற்றுள் படரொல்லா துடல்மெலியும் காதலியல்பு வருதல் காண்க.

'கண்துயில் மறுத்தல்'; இது தண்டாக் காதல் கொண்டார் துயிலாமை.

"வாராக் காற்றுஞ்சா, வரிற்றுஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்" (குறள் 1179)

"நனந்தலை உலகமுந்துஞ்சும்
ஓஒயான் மன்றதுஞ்சா தேனே" (குறுந். 6)

எனப் பதுமனாரும்,

"கோடீரிலங்குவளை நெகிழநாடொறும்
பாடிலகலுழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலுமுயங்குவம்" (குறுந். 11)

என மாமூலனாரும்,

"பிறங்குமலை அருஞ்சுரமிறந்தவர்ப் படர்ந்து
பயிலிரு ணடுநாள் துயிலரிதாகி; (குறுந். 329)

என ஓதலாந்தையாரும்,

"மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல்லாவே" (குறுந். 5)

என நரிவெரூஉத் தலையாரும்,

" கோடீரிலங்குவளை நெகிழநாளும்
பாடிலகலிழ்ந்துகண் பனியா னுவே......
பெருங்கல்நாட! நின் நயந்தோள் கண்ணே" (குறுந். 365)

என நல்வெள்ளியாரும்,

" பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க" (கலி. 16)

எனப் பெருங்கடுங்கோவும் கண்துயில் ஒல்லாக் காதலியல்பு கூறுதல் காண்க.

இனிக் 'கனவொடு மயங்கல்' ஆவது நயந்தோர் பிரிவால் அயர்ந்த காதலர் அறிதுயில் கொள்ளின் கனவிற்றுணைவரைக் கண்டு களித்து விழித்தபின் காணாது வெருளுதலாகும்.

"........அல்கற், பொய்வலாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனு மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந் தனனே" (குறும். 30)

என நந்நதையார் குறும்பாட்டில் தலைவியும்,

"..................யாழ, நின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல்நீவி
நறுங்கதுப் புளரிய நன்னர் அமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலரல்" (அகம். 39)

என மதுரைச் செங்கண்ணனுர் அகப்பாட்டில் தலைவனும் கனவொடு மயங்குதல் காண்க.

" நனவினுல் நல்காதவரைக் கனவினுல்
காண்டலின் உண்டென்னுயிர்"

எனும் குறளும் அது.

'பொய்யாக் கோடலா'வது, காதன்மையால் மெய்யைப் பொய்யாகத் திரித்துக்கோடல்.

" பெண்ணியலாரெல்லாரும் கண்ணிற்பொது வுண்பர்
நண்ணேன் பரத்த நின்மார்பு" (குறள். 1311)

" வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்
மாயம் மருள்வார் அகத்து" (கலி. 88)

இவற்றுள் தலைவி மெய்யைப் பொய்யாக் கொண்டு கூறுதல் காண்க.

'மெய்யே யென்றல்'; இது முன்னதற்கு மாறுக பொய்ப்பினும் தலைவன்சொல் மெய்யெனத் துணியும் தலைவியியல்பு.

" கானம் காரெனக் கூறினும், யானோதேறென்
அவர்பொய் வழங்கலரே" (குறுந். 21)

" பெருங்கல் நாடன் இனியனுகலின்,
இனத்தியன்ற வின்னுமையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே " (குறுந். 288)

எனத் தலைவன்சொல் மெய்யெனக்கொள்ளும் காதலியல் வருதல் காண்க.

" கழங்காடாயத்து அன்று நம்மருளிய
பழங்க ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே"—(அகம். 66.)

என்பதுமது.

'ஐயஞ்செய்தல்'; இது, காதல் மிகையாற் கடுக்கு மியல்பு.

" ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவது எவன்கொல்? அறியேன், என்னும்" —(கலி. 4.)

" நெஞ்சு நடுக்குறக் கேட்டும் கடுத்துந்தா
மஞ்சியதாங்கே அணங்காகும் என்னுஞ்சொல்
இன் தீங்கிளவியாய் வாய்மன்ற, நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட, யானும்
இது வொன்றுடைத்தென எண்ணி அதுதேர" (கலி. 24)

என ஐயுறல் காதற்குறியாதல் காண்க.

இனி, 'அவன் தமர் உவத்தலா'வது, தலைவன் சுற்றத்தை நயத்தல்.

" ...................தந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாயுழைப்புக்காற் கவளும்
...........................................
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினள், முத்தினள், நோக்கி நினைந்தே
நினக்கு யாம் யாரேமாகுதும் என்று
வனப்புறக் கொள்வன நாடி அணிந்தனள்" (கலி, 82)

இதில் தலைவன் புதல்வனை வழிமுறைத்தாய் கண்டுவந்த செவ்வி கூறப்படுதல் காண்க.

'அறனழிந் துரைத்தலா'வது அறனழிய வெறுப்பது போல வெறித்துக் கூறல்.

"........பிரிந்தோருள்ளா
தீங்குரல் அகவக்கேட்டு நீங்கிய
ஏதிலாளர் இவண்வரிற் போதிற்
பொம்மலோதியும் புனையல்,
எம்முந்தொடாஅல், என்குவ மன்னே" (குறுந். 191)

" யாருமில்லைத்தானே கள்வன்
தானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ" (குறுந். 25)

" அளித்து அஞ்சல் என்றவர் நீப்பிற்றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு" (குறள். 1154)

" விளியுமென் இன்னுயிர் வேறு அல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து" (குறள். 1209)

இவையனைத்தும் காதல்மிகையால் தலைவியறனழிய வெஞ்சொல் விளம்பும் இயல் குறிப்பதறிக. இன்னும்,

" நற்றோள் நயந்து பாராட்டி
எற்கெடுத்திருந்த அறனில் யாய்க்கே" (ஐங்குறு. 385)

" ஊரலரெழச் சேரி உகல்லென
ஆனு தலைக்கும் அறனில் அன்னை
தானே யிருக்க தன்கன்யானே" (குறுந். 262)

என வருவனவும் அறனழிந்துரைத்தலேயாகும். அறனழிவது போலக் கூறினும், அகக் கூற்றுக்கள் காதன்மையால் எழுதலால், மெய்யாக அறனழிக்கும் நோக்குடையனவாகா.

இனி, அறன் அளித்துரைத்தல் எனும் பாடம் சிறவாது. அப்பாடத்திற்கு, அறத்தை அருளொடு கூறல் என்பது பொருளாகும்.

'ஆங்குநெஞ்சழிதலா'வது, சொல்லளவில் அறனழிவது போலக் கூறிய தலைவி, அவ்வளவிற்குளம் உளைந்து பின் வருந்துதல்.

" என்னெஞ்சம்—அழியத் துறந்தானைச் சீறுங்கால்
என்னை—ஒழிய விடாதீமோ என்று" (கலி. 143)

" நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ?" (குறுந். 93)

என்பன இம்மெய்ப்பாடு குறிக்கும். அறனளித்துரைத்தாள் பின் அதற்கு நெஞ்சழிதல் வேண்டாவாதலின் அப்பாடம் பொருந்தாமை யறிக.

இனி, 'எம்மெய்யாயினும் ஒப்புமைகோடல்'; இது உள்ள பொருள் எதுவும் தலைவன் உரு, வண்ணம், பண்பு, வினைகளுள் ஒன்றுக்கு ஒப்பெனக் கருதும் காதலியல்பு.

" இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திரவதனமும் தாழ்ந்தகைகளும்
சுந்தரமணிவரைத் தோளுமேயல
முந்தியென் னுயிரையம் முறுவல் உண்டதே"

" படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளுமேயல

கடந்தரு மதங்கலுழ் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே" [கம்பர் மிதிலைக் காட்சி. 56, 57]

இவற்றில் தலைவன் உறுப்பு, வண்ணம், நடை முதலிய வற்றிற் குரிய பொருள் ஒப்புக்கோடல் காண்க.

இனி, தலைவன் பொருள்களைத் தலைவிக்கு ஒப்புக்கோடலும் இத்துறையாகும்.

"நன்னீரை வாழி யனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்" (குறள். 1111)

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று" (குறள். 1112)

"மதியு மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்" (குறள். 1116)

என வருபவை தலைவன் தலைவிக்கு ஒப்புமை கோடலைக் குறிப்பன.

'ஒப்புவழி யுவத்தல்'; இது அவ்வாறு ஒப்புமை கண்டவழி மகிழுங் காதலியல்பாம்.

"பால் கொளலின்றிப் பகல்போன் முறைக்கொல்கா
கோல்செம்மை ஒத்திபெரும!" (கலி. 86)

'உறுபெயர் கேட்டல்'; இது தலைவன் பீடார் பெரும்பெயர் பிறர்வாய்க்கேட்டு மகிழ்தல்.

"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு" (குறள். 1199)

"மென்றோள் ஞெகிழ்த்தான் தகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற" (கலி. 142)

'நலத்தக நாடில் கலக்கமும் அதுவே' என்பது நன்றாகத் தகுதி நோக்கியாயின், மயக்கமென்பதும் மற்ற முன் 19ம் போலவே காதற்றிணை நிமித்தமாகும் மெய்ப்பாடேயாம் என்னும் குறிப்பிற்று. முன் குறித்த 19ம் அமையாவழியே, அவற்றினிறுதியில் கலக்கம் எழுவதொன்றும் எனும் அதன் சிறப்பியல் குறித்தற்கு அது தனிப்பிரித்து இறுதியில் கூறப் பட்டது.

இவையெல்லாம் பால் பிரியாது பொதுவாகக் கூறப் பட்டதனால், பெருவழக்காய் தலைவியர்மாட்டேநிகழுமெனினும், ஏற்புழித் தலைவர்க்கு ஏற்பனகோடலும் கடிவரையின்மை கருதற்பாற்று. (தொடரும்.)

# காட்சியளவை

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், B. A. (Lond.)
சுன்னுகம், இலங்கை.

(முற்றொடர்ச்சி: துணர் 16, மலர் 2. பக்கம் 73.)

## 10. எண்ணல் முறைத் துணிபு.

இரு பொருட்கள் யாண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருக்குமென எண்ணல்முறையால் அறிந்தோமாயின், ஒரு காரண காரியத் தொடர்பு உண்டென ஐயுறலாம். எண்ணல்முறையால் இயற்கைவிதி யொன்றைத் துணிய வியலாதாயினும் எண்ணல்முறை ஆராய்ச்சி யாவற்றிற்கும் அடிப்படையானது. யாண்டுப்புகை ஆண்டுத்தீ என்பதைக் குறையெண்ணல் முறையாகத் துணிகிறோம். இக்குறையெண்ணலின் துணிபைப் பூரணவெண்ணல் முறையாய் நிரூபிக்க வியலாது. ஒரு துணிபைத் துணிதற்கு வேண்டிய குறிப்பைத் தருதலான் எண்ணல் முறை இயற்கையாரய்ச்சிகளில் உபயோகப் படும்.

சூரியனைச் சுற்றிச் சுழலும் உருண்டைகளின் பாதை நீளவட்டமாக (Ellipse) இருக்கவேண்டுமென எண்ணல் முறையின் வழி கெப்பிளர் (Kepler) துணிந்தனர். செவ்வாய் விசும்பில் தோற்றும்நிலைகளை ஒருரேகையாக வரைந்து அதன்பாதை நீளவட்டமெனக் கண்டார். வேறுசில உருண்டைகளும் நீளவட்டப் பாதையிலே சுழன்று திரிவனவாகையால் எல்லா உருண்டைகளும், நீளவட்டப் பாதையில் சுழல்கின்றனவெனத் துணிந்தார். இத்துணிபை இயற்கை விதியாகக்கோடல்பெருங் குற்றமாகும். இத்துணிபை ஒரு ஐயமாகவே எண்ண வேண்டும். எண்ணல் முறைகளால் ஐயங்களைத் துணியலாம்.

## 11. குறிப்பந்நுவயங்கள்

எண்ணல் முறையால் இயற்கைவிதிகளின் குறிப்புகளை ஆராய்கிறோம். இக் குறிப்பாராய்தல் ஆராய்ச்சியின் முதனிலையாகும். குறிப்புகளைக் காட்சி செய்து ஒரு ஐயத்தையே துணியலாம். எச்ச அந்நுவயங்கள் இயற்கைக் குறிப்புகளை உணர்த்துமாயின், அவற்றினைக் குறிப்பந்நுவயங்கள் என்போம். குறிப்பந்நுவயங்கள் பல ஒரு இயற்கைநிகழ்ச்சியின் குறிப்புகளை உணர்த்துமாயின் அவ்வியற்கை நிகழ்ச்சியைப் பற்றிய ஐயம் ஒரு துணிபாகும் (Probability).

இத்துணிபு பிரமாணமன்று. துணிபென்பது ஐயநிலையினும் சிறந்த நிலை. பறவைகள் ஒரு திக்கை நோக்கிச் சென்றால் மழை பெய்யும் எனச் சிலர் மொழிகின்றனர். இது ஒரு குறிப்பே. இக்குறிப்போடு வேறுசில குறிப்புகளும் நிகழ்ந்தால் மழை பெய்யும் என ஒருதலைப்படலாம். கருமுகில் குளிர்காற்று முதலியன தோற்றின் குறிப்பு வலியடையலாகும். சாதாரண மக்கள் இக்குறிப்புகளைக்கொண்டே இயற்கைத் தோற்றங்களின் இயல்பை வரையறுக்கின்றனர். குறிப்பந்நுவயங்கள் பல குறிப்புகளை உணர்த்தி, ஒருதுணிபை நிலைநிறுத்தும்.

## 12. மூன்றும்நிலைக் குறிப்பந்நுவயங்கள்

மூன்றும் நிலைப் போலித்துறைகள் குறிப்பை உணர்த்தி, குறிப்பந்நுவயங்களாகும். அகத்தியர் நல்லவர்; அகத்தியர் முனிவர்; முனிவர்கள் எல்லாம் நன்மக்கள்.

ஞானம் நல்லொழுக்கத்தைக் குறிக்கின்றது. இவ்வொரு காட்சி ஒரு ஐயத்தைக் கொடுக்கும். இவ்வாறு பல காட்சி குறிப்பாகில் குறிப்பந்நுவயங்கள் ஒரு துணிபைக் குறிப்பாக மொழியும்.

சோடியம் நீரில் மிதப்பது. சோடியம் ஒரு உலோகம். சில உலோகம்நீரில் மிதக்கும். உலோகம் நீரில்தாழும் தன்மைய தென்பது மறுக்கப்பட்டது.

ப, இனத்தைச் சேர்ந்த வண்ணாத்திப் பூச்சிகள், ம, இனத்தைச் சேர்ந்த வண்ணாத்திப் பூச்சிகளோடு ஒப்புடைய ஒரு பண்புடையன.

ப, இனத்தைப் பறவைகள் இரையாகத் தேடுகின்றில.

ம, இனத்தையும் பறவைகள் இரைபாகத் தேடாவென அறிந்தோமாயின் அவ்வொப்பிலட்சணம் ஒரு பாதுகாப்பு இலட்சணம் எனத்துணிவோம். இக்குறிப்பு நல்ல துணிபொன்றை உணர்த்துகின்றது.

ப, ம, வ........விரிந்தகன்று நீளும் தன்மையுடையன. ப, ம, வ...........உலோகங்கள். ஆகையால் உலோகங்கள் விரிந்தகன்று நீளுந் தன்மையையுடையன. ப, ம, வ...........மின்வாங்கிப் பொருட்கள். ப, ம, வ,....உலோகங்கள். ஆகையால்உலோகங்கள் மின்வாங்கிப் பொருட்கள். அந்நுவயக் குறிப்புகள் இயற்கை யாரய்ச்சித் துணிபுகளைக் காட்டும்.

**இரண்டாம் நிலைக் குறிப்பநுவயங்கள்.** சுரத்தால் வருந்தும் ஆதுரனுக்குத் தாகம் அதிகரிக்கும். இந்த ஆதுரனுக்குத் தாகம் உண்டு.

இந்த ஆதுரன் சுரத்தால் வருந்துகிருனென மருத்துவன் குறிப்பால் உணர்வன். இரண்டாம்நிலை எதிர்மறைச் சாத்தியத்தையே துணியும். ஈண்டுக் குறிப்பநுவய மாகலான் உடன்பாடாகத் துணிந்தது. இத்தகைய குறிப்பநுவயங்கள் தொடையலாக நின்று ஒரு துணிபைக் காட்டுமாயின் அதை ஒரு இயற்கை விதித் துணிபு எனக் கூறலாம். இரண்டாம் நிலைக் குறிப்பநுவயத் தொடையலாகும் சான்றுகளாலேயே உடன் சாட்சியில்லாத முறைப்பாடுகளை ஆராய்ந்து நீதி செலுத்துகின்றனர். நீதிபதி சிற்சில சமயங்களில் இவ்வாறு துணிந்து சுத்தனையும் கொலைத் தண்டனைக்கு நியமிக்கின்ருன். பல குறிப்புகள்சேர்ந்து ஒருதுணிபை நாட்டுவதைக் காட்டுதும்.

(1) கொலையாளி கொலைக் களத்தை விட்டு ஓடுவான்.
அ. கொலைக் களத்தில் நின்று ஓடுகிருன்.
அ. கொலையாளியாதல் கூடும்.

(2) கொலைபுரிவோரின் ஆடைகளில் இரத்தவடையாளம் இருக்கும்.
அ என்பவனது ஆடையில் இரத்த அடையாளம் உண்டு.
அ. கொலையாளியாதல் கூடும்.

(3) ஒருவன் பகைவன் கொலையாளி யாதல் கூடும்.
அ. கொலை செய்யப்பட்டவனின் பகைவன்.
அ. கொலையாளியாதல் கூடும.

இத்தகைய பல குறிப்புக்கள் அ என்பவனையே கொலையாளியாகச் சுட்டுமாயின், அ என்பவனே கொலையாளியெனத் தீர்க்கப்படும்.

முதல் நிலைக் குறிப்புகள் பிரதானமானவை அல்ல. இக்குறிப்புகள் கயநோயைக் குறிப்பன. இம்மனிதன்கண் இக்குறிப்புக்கள் உண்டு. இம்மனிதன் கயநோயால் வருந்துகிருன். இந்நிலையில் மத்திய பதமாகிய குறிப்புகள் காரணத்தைக்கூருமல் காரியத்தைக் குறிக்கின்றன. ஒன்றன் குறிப்பநுவயங்கள் பலவாகின் குறிப்பின் துணிபு வலியுறும். ஒப்பளவையின் இயல்பை ஆராய்ந்த பின்னர், குறிப்பநுவயங்களின்துணிபின் நலத்தை நன்குஉரைக்கலாமாகையால் ஒப்பின் இலக்கணத்தை மொழிவாம்.

## ஒப்பளவை

இருபொருட்கள் ஒன்றற்கொன்று சிலபண்புகளால் ஒப்பாகின் ஒன்றன் பண்புகளை அறிந்தோமானால் மற்றதன் பண்புகளை ஒருவாறு துணியலாம். இருமுக்கோணங்கள் தம் கோணங்களால் ஒப்பாகின் அவ்விரு முக்கோணங்களும் தங் கோணங்களைவரையறுக்கும் கோடுகளாலும்ஒருவாறுஒப்பாகும். வடிவக்கணிதப் பண்புகள் நினைவுலகப் பொருட்களாகையால் தெளிவாய் வரையறுக்கப் படுகின்றன. வடிவக்கணிதப் பொருட்களில் ஒப்பாராய்தல் இலகுவாகும். இயற்கையாராய்ச்சி நூல்கள் நுவலும் ஒப்புகள் அவ்வளவு வலியுடையன அல்ல. பண்புகளைக் கிழமைகளோடும் தற்கிழமையைப் பிறிதின்கிழமை யோடும்ஒப்பிட்டுமயங்குதல் இயல்பாகலான் ஒப்பளவைஒன்றை நிரூபித்துக்காட்டாதென மேனாட்டார் வற்புறுத்துகின்றனர்.

இருபொருள்கள் பல பண்பால் ஒப்பாயினும் ஒப்பு போலி யாதல்கூடும். ஒப்பாராயும் பண்புகள்பண்பிகளின்சொரூபத்தை உணர்த்தும் பண்புகளாதல் வேண்டும். ஒருபொருள் பிறிதொரு பொருளோடு பல பண்புகளால் வேற்றுமையாக இருப்பினும் சில சொரூப இலக்கணங்களால் ஒப்பாகின் ஒப்பு வலியுடைய தாகும். இரு இளைஞர் ஒரேஉயரமும், ஒரே தோற்றமும், ஒரேவயதும், ஒரேபிறப்பிடமும் உடையராய், ஒரேகல்லூரியில் கற்பவருமாய் பலவாறு ஒப்புடையராகினும் இவ்வொப்பின் பயனாக ஒருவர் விவேகியாகின் மற்றவரும் விவேகியாவரெனத் துணிய வியலாது. எடுத்துக் காட்டிய பண்புகள் ஈண்டு இவ் வுவமானத்திற்கு இன்றியமையாத சொரூபலக்கணங்கள் அல்ல. விவேகத்தோடு தொடர்புடைய பண்புகளே ஒப்பிற்குரியன. உளநூல்வல்லோரே விவேகத்துக்குரிய பண்புகளைச்சாதாரணப் பண்புகளினின்றும் பிரித்தறிய வல்லவராவர்.

போலியொப்பை உதாரணத்தால் விளக்குவாம். எங்கள் பூமியும் மற்றும் செவ்வாய் புதன் வியாழன் சனி முதலிய உருண்டைகளும் பல ஒப்புப் பண்புகளுடையன. செவ்வாய் புதன் முதலியன ஞாயிற்றைச் சுற்றிச் சுழல்வன. ஞாயிற்றின் வெப்பத்தை வேண்டிநிற்பன. பெரும்பாலும் தத்தம் திங்களை யுடையன; தத்தம் வாய்வுமண்டலமுடையன.

இங்ஙனம் பல பண்புகளால் ஒப்பாகையால் பூமியிலுள்ள பிராணிகள்போல செவ்வாய், புதன் முதலியவற்றிலும் பிராணிகள் உண்டாதல் கூடும். இது போலியொப்பு. பிராணி

களுக்குவேண்டிய பிராணவாயு, உணவாயு, ஊணணு, முதலிய இன்றியமையாப் பண்புகள் உண்டோ இல்லையோவென அறியோமாகலான் ஒப்பு வலியுடையதாகாது.

ஒப்பாராயும்போது ஒப்பிற்குவேண்டிய பண்புகளைத் தெரிந்தெடுத்து அவை சொரூபத்தைக் குறிக்கும் பண்புகளோவென ஆராயவேண்டும். பண்புகளுக்கும், கிழமைகளுக்கும் உள்ள வேற்றுமைகளைத் தெளிவாக உணர்ந்து ஒப்பைத்துணிக. ஒப்பின் துணிபு ஒரு ஐயத்துணிபே. குறிப்பந்நுவயங்களின் துணிபுகளைப்போல் ஒப்பால் பெறப்படும் துணிபுகளையும் ஆராயவேண்டும். தமிழ் நூலோர் ஒப்பளவையால் நுண்ணிதான உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து விளக்குகின்றனர். தமிழ்த் தத்துவ நூலோர் ஒப்பளவையைப் பெரிதும் பயின்று தத்துவங்களை உபமானங்களால் விளக்கிக் காட்டுகின்றனர். உலகப்பற்றைக் களைந்த ஆன்மா இருவினையொப்பின் பயனுக முழுமுதற் கடவுளாகிய கந்தழியினது அருளைப்பெற்று முத்தனுகி இரண்டறக்கலந்து ஆனந்த மயமாகி நிற்கும் நிலையை உவமானத்தால் விளக்குகின்றனர். சீவான்மாவும், பரமான்மாவும் ஆற்றுநீரும் கடல்நீரும் போலக் கலக்குமென்னும் உவமானம் பொருந்தாது. ஆற்றுநீர் தன் குணத்தை மறைத்து கடல் நீரின் தன்மையைக் காட்டும். ஆன்மா சுதந்தரம் ஒழிந்து கடவுளைப்போல ஐந்தொழில் செய்யாது. ஆன்மா முதல்வனைக் கலந்து நிற்கும் நிலை உப்பணையும் நீருக்கு உவமானமாகும். நீராகிய ஆன்மா உப்பாகிய முதல்வனின் தன்மையை ஒருவாறு பெற்றும் உப்பாகப் பரிணமியாத நீர்போலத் தன் சுதந்திரத்திற்கு இழுக்கின்றி நிற்கும்.

## இரண்டாம்நிலைக் குறிப்பும், ஒப்பும்.

இரண்டாம்நிலை குறிப்பந்நுவயங்கள் ஒப்பை அடிப்படையாகக்கொண்டுள்ளன. பலஒப்புகள் தொடையலாக நின்று ஒப்பை வலியுறுத்தல் காண்க.

பனிப்பாறை ஊரும் தரைகளிலுள்ள கற்பாறைகள் கோடு வரையப் பட்டவையாக இருக்கின்றன. பிரித்தானியாத்தீவில் இன்ன இன்ன பள்ளத்தாக்குகளில் உள்ள கற்பாறைகள் கோடு வரையப் பட்டவை. ஆதலின் பிரித்தானியாத்தீவுப் பள்ளங்களில் பனிப்பாறை ஊர்ந்திருத்தல் கூடும். பனிப்பாறைகள் ஊரும்போது கற்பாறைகளைக் கீறிக் கோடிட்டுச் செல்கின்றன. இக்காலத்தில் பனிப்பாறைகளால் மூடப் பட்டிருக்கும் தேசங்

களில் இந்நிகழ்ச்சி உண்டென்பது காட்சித்துணிபு. பனிப் பாறைகள் கல் முதலியவற்றை உருட்டிச் செல்லும்போது அக் கற்கள் கற்பாறையோடு உரைஞ்சுதலால் கற்பாறைகளில் கோடுகள் உண்டாகின்றன. மழை, காற்று, குளிர். சூடுமுதலிய ஏதுக்களால் அழிவெய்தாமல் பல நூற்றாண்டுகளுக்கும் இக் கோடுகள் நிலைக்கும்.

பனிப்பாறை ஊரும் தரைகளில் பெருங்கற்கள் குவிக்கப் படும். மேற்கூறிய பிரித்தானியா தேசத்துப் பள்ளங்களில் பெருங்கற்கள் குவிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் அப் பள்ளங்களில் பனிப்பாறைகள் ஊர்ந்திருக்கவேண்டும். பனிப் பாறைகள் பெருங்கற்களை உருட்டிச் சென்று சம பூமிகளிலும் மலைச்சாரல்களின் பக்கங்களிலும் ஒதுக்கிவிடும். இப் பெருங் கறகள் அழுத்தமாயிருக்கும்.

பனிப்பாறை ஊர்ந்த இடங்களில் பனிப்பாறையால் அரிக்கப் பட்ட கல், மண் முதலியவை மலையடிவாரத்திலும் பள்ளச் கரையிலும் இடப்பட்டிருக்கும். மேற்கூறிய பிரித் தானிய தேசத்துப் பள்ளத்தில் கல் மண் முதலியவை இடப் பட்டிருக்கின்றன. ஆதலின் பிரித்தானியதேசத்துப் பள்ளத்தில் பனிப்பாறை ஊர்ந்து இருக்கவேண்டும்.

பனிப்பாறை ஊரும்போது பிறைபோன்ற பள்ளத்தாக்கை அரித்துச் செல்லும். மேற்கூறிய பிரித்தானிய தேசத்துப் பள் ளங்கள் பிறை போன்ற வடிவானவை. ஆதலின் பிரித்தானிய தேசப் பள்ளத்தில் பனிப்பாறை ஊர்ந்திருக்கவேண்டும். பனிப்பாறைகள் பிறை வடிவான பள்ளங்களையும் நீராறுகள், முக்கோணப் பள்ளங்களையும் அரித்து ஊர்வன.

பனிப் பாறைகள் ஊர்ந்த தேசங்களில் தூங்குபள்ளம் உண்டு. பிரித்தானிய தேசப் பள்ளங்கள் சில தூங்கு பள் ளங்கள். ஆதலின் பிரித்தானிய தேசப் பள்ளங்களில் பனிப் பாறைகள் ஊர்ந்திருக்கவேண்டும். இத்தகைய பல ஒப்புப் பண்புகளால் ஆக்கப்பட்ட ஒப்பு வழியுடையதாகும்.

(தொடரும்.)

# கலிங்கப் போரும், காலிங்க வீரரும்

திரு. ஈ. ஆர். நாசிம்ம ஐயங்கார் அவர்கள், பி.ஏ. பி.எல்., வக்கீல், சேலம்.

(முற்றொடர்ச்சி, துணர் 16. மலர் 2. பக்கம் 67.)

விக்கிரமன் புரிந்த போரைப் பொருளாகக் கொண்டு ஒ.. பரணிநூல் இயற்றப்பட்டிருந்ததென்னும் குறிப்பு இரண்டாம் குலோத்துங்கன் உலாவில் காணப்படுகின்றது. இவன் கி. பி. 1146-ல் அரசெய்தினன்.

" வேற்றோர்
விரும் பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும் பரணி கொண்ட பெருமான் "

இப்பரணியின் பெயர் கலிங்கப் பரணிஎன்று கூறப்படுகின்றது. ஒட்டக்கூத்தர் தாம் பாடியுள்ள குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் இப்பரணியைப் பாடிய புலவர் பெயரை எடுத்தியம்பி அவர் புலமைத்திறனைப் பாராட்டுவாராயினர். இது வருமாறு.

" திருடுபொருண் மூகர் பழைய மொழியாளர்
வெளியரின நீர ரிளமையே
திகழுமொழி யாத ரிவர்களொரு நால்வர்
சிறிதுமறி யாது பரர்களே
நெருடுவன தீர நிகரில்கவி ராச
னிலவுகவி மாலை குலவுதோ
ணிருபன்மகன் மோக னடனடவி நோத
னிருபகுல தீபன் வருகவே "

இப்பரணி பாடிய புலவர்பெயர் கவிராசன் என்பது. கவிராசன் என்றபுலவரைத்தக்கயாகப்பரணியுரைகாரர் பாராட்டியுள்ளார். தக்கயாகப் பரணி யுரையிலும், அடியார்க்கு நல்லாருரையிலும், பேராசிரியருரையிலும், நச்சினார்க்கினியருரையிலும் மேற்கே. ளாட்சிபெற்றுள்ள சில பரணித் தாழிசைகள் இக்கவிராசனால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணியைச் சார்ந்தனவாரு மென்னலாம்.

இப்பரணிநூல் ஜெயங்கொண்டாரால் பாடப்பட்ட நூலொடு ஏற்றபெற்றியுடையதாயிருந்ததென்பதற்கு இம்மேற் கோளாட்சியே சான்று பகருமென்க. மற்றும் கவிச் சக்கிர வர்த்தி ஒட்டக்கூத்தரின் நன்மதிப்பும் பெற்றிருக்கின்றதால்

இதன் பெருமை நன்கறியப்பட்டதென்க. இந்நூலைத் தக்க யாகப் பரணியாசிரியர் தெய்வப் பெரும் பரணியென்று புகழ்ந் திருப்பதும் அறிக. இது வழக்கினின்றும் வீழ்ந்தது. தக்க யாகப் பரணியுரையில் கலிங்கப் பெரும் பரணியைப் பாடிய புலவர் பெயர் ஒட்டக் கூத்தரென்று காணப்படுவது ஏடெழுது வோர் பிழையாவது தெளியப்படும். இங்குக் காட்டியவாற்ருன் இத்தகையதோர் நூல் இயற்றப்பட்டிருந்ததோ வென்று ஐயுறுவதற்கு இடனின்றென்பது தெளியப்படும்.

இங்ஙனமாயின் விக்கிரமன் பரணிச் சிறப்புடையவனுய் இருந்ததை ஒட்டக்கூத்தர் தாம் பாடியுள்ள விக்கிரசோழனுலா வில் கூருது போந்ததென்னையென்னும் கடாவிற்கு ஒட்டக் கூத்தர் உலாப்பாடியபோது குளத்துப்போர் நிகழவில்லையென்க. இது குலோத்துங்கன் சாசனத்தினும் ஜெயங்கொண்டார் நூலினும் குறிக்கவில்லையென்பதற்கும் ஒக்கும். இக்குளத்துப் போர் இராசராசன்உலாவில் பல போர்க்களங்கள் கூறுமிடத்து "கலிங்கத்திற் கொச்சியில் வாதாவியில் குளத்தில்" என்று குறிக்கப்படுவதும் இக்கருத்தை வலியுறுத்தும். இதனுன் விக்கிர சோழனுலா குளத்துப்போருக்கு முன்னரும் கவிராசன் பாடியபரணி நூல் பின்னரும்பாடப்பட்டன வென்பதுபோதரும். இவ்விலக்கியச் சான்றுனும் விக்கிரசோழன் காலத்திலும் ஓர் கலிங்கப் போர் நிகழ்ந்ததென்பது நிறுவப்பட்டதென்க.

விக்கிரமசோழன் அரியணையேறிய காலத்தில் காளைப் பருவம் கடந்தவனுவன். இவன் செய்த கலிங்கப் போரும் அவ னரசெய்திய காலத்திற்கு ஆருண்டுகளின் பின்னிகழ்த்தப்பட்ட தாகும். இவன் "ஐம்படைப் பருவத்து வெம்படைதாங்கி" ஞனென்று மெய்க்கீர்த்தி இயம்பும். குலோத்துங்கன் காலத் துப்போரும் கருணுகரனுல் நிகழ்த்தப்பட்டதென்பர். இச் செய்திகள் ஒன்றனேடொன்று முரண்படுகின்றதே என்னும் வினுவெழுப்ப வியலும். முதற் கலிங்கப்போர் நிகழ்ந்தகாலையில் விக்கிரமசோழனும் கருணுகரனுடன் சென்றிருந்தான் என்பது காட்டவியலுமாயின் முரண்பாடு அகலுமென்க, இளங்கோக்கள் போர்ப் பயிற்சிபெறும் வழக்கானும், விக்கிரமசோழன மெய்க்கீர்த்தியானும் ஜெயங்கொண்டார் நூலானும் இக்கருத்து விளக்கமெய்துவதைக் காட்டுவாம்.

முதலில் விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியை நோக்குவாம். இது வருமாறு,

"குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல் மிசையேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து"

இங்கு முதலில் விக்கிரம சோழன் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த குளத்துப்போர் கூறப்படுகின்றது. பின்னிரண்டடிகளில் கலிங்கப் போரும் விக்கிரமன் இளங்கோப் பருவத்து வேங்கி நாட்டில் வீற்றிருந்தாட்சி புரிந்ததும் கூறப்படுகின்றன. இது குலோத்துங்கன் காலத்து நிகழ்ந்ததாகும். செய்யுட்களில் நிகழ்ச்சிகள் காலமுறை பிறழக் கூறப்படும். பிற்கூறியதை முன்வைத்துப் பொருள் கொள்க. இத்தகைய கருத்துக்குச் சரிதம் அடிப்படையாகும். இதனை நோக்காதார் இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரேகாலத்தில் நிகழ்ந்தனவென்று கொண்டு இடர்ப் பாட்டில் உழல்வர். இதனுன் விக்கிரமன் கலிங்கப் போருக்குச் சென்றிருந்தான் என்பது ஊகித்தறியலாகும்.

மற்றும் இளங்கோக்கள் போர்ப்பயிற்சி பெறும் வழக்கும் அறிதல் வேண்டும். கோப்பத்துப் போர் நிகழ்ந்த காலை இராசாதித்தனுடன் விசயராசேந்திரன் சென்றிருந்ததறிக. குலோத்துங்கன் இளங்கோவாய் இருந்தகாலையில் கலிங்கர் வேங்கிநாட்டைக் கைப்பற்றினர். குலோத்துங்கன் பொருட்டு வீரராசேந்திரன் கலிங்கரோடு சக்கரக்கோட்டத்தில் பொருது வேங்கிநாட்டை மீட்டனன். இப்போரைக்காண குலோத்துங்கன் வீரராசேந்திரனுடன் சென்றிருந்தானுகலின், இப் போர்வெற்றி உபசாரமாகக் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியிலும் உரைக்கப்படலாயிற்று. இதனுன் இளங்கோக்கள் போர்ப் பயிற்சி பெறுதற் பொருட்டுப் படைத்தலைவர் கண்காணிப்பில் போவதுண்டென்பது உணரத்தக்கது. இவ்வாறு விக்கிரமனும் கருணுகரனுடன் கலிங்கப்போர் காணச்சென்றிருந்தமையான் உபசாரமாகக் கலிங்க வெற்றியை விக்கிரமனுக்கும் புலவர் உரியதாக்கினுரென்க. விக்கிரமன் கருணுகரனுடன்சென்றுனென்பது பரணிநூலில் கூறப்பட்டிருப்பதைக் காட்டுவாம்.

பரணிநூலாசிரியர் கவிச்சக்கரவர்த்தி யாகலின் அவர் வாக்கு சொற்செறிவும் பொருட்பொதிவு முடையதாகும் என்பது தானேபோதரும். மற்றும் பரணி நூலில் உரைக்கப் படும் பொருள் போராகலின் போர் வரலாறும் போர்புரியப் படும் வழக்கும் போர்ப் பயிற்சிபெறும் முறை முதலியவற்றையு மோர்ந்து பொருளறிய முயலவேண்டும். இதற்கு மற்றை

இலக்கியம் போல் பொருள் உரைக்கப்புகுவது பிழையிலுய்த்து விடும். புலவர் இளங்கோக்கள் போர்ப் பயிற்சிபெறுவதன் பொருட்டுச் செல்வதைப் படைத் தலைவர் சென்ற முறையி லடக்கிக் கூறியுள்ளார். இதனைப் பிறரெல்லாம் ஓராது விக்கிரமன் போருக்குச் சென்றானென்னும் குறிப்பு பரணியில் காணவில்லையெனக் கூறிவிட்டார். இதனைச் சிறிது நோக்குவாம்.

கலிங்கப் போருக்கெழுந்த படைத்தலைவர்கள் சென்ற முறையைக் கூறுவான் தொடங்கி முதலில் கருணாகரனும் பின்னர் வாணகோவரையனும் கடையில் பல்லவர்கோனும் சென்றார் என்றார்.

வாணகோவரையன் ஊர்ந்த களிற்றின்மீது முடிகொண்ட சோழனும், பல்லவர்கோன் கொண்ட வாரணத்தின்மீது வளவர் வேங்கைதென்பவனும் உடனமர்ந்து சென்றதைக் கவிச் சக்கரவர்த்தி பகர்ந்துள்ளார். முடிகொண்ட சோழனும், வளவர் வேங்கைதென்பவனும் குலோத்துங்கன் மக்களாவர். இவ் விருவரும் போர்ப் பயிற்சிக்குச் சென்றவராவர். குலோத் துங்கனுக்கு மக்கள் மூவரிருந்தார்களென்பர். விக்கிரமசோழன் வேங்கிநாட்டைக் கலிங்கப்போர் நிகழ்ந்தகாலம் முதல் ஆட்சி புரியத் தொடங்கினானாகலின் அவன் கலிங்கப்போர்க்காலத்தே வடநாடு சென்றிருந்தான் என்னவேண்டும். விக்கிரமன் கருணா கரனுடன் சென்றான் என்பது பொருந்தும். இதனைப் பரணி யாசிரியர் கூறியுள்ளாரோ வென்பதனை நோக்குவாம்.

தண்ணார்மலர் சேர்திர டோளபயன்
தானேவிய சேனை தனக் கடையக்
கண்ணாகிய சோழ னிசக்கரமாங்
கருணாகரன் வாரண மேற்கொளவே.

இது கருணாகரன் சென்றதைக் கூறும் தாழிசை. இத்தாழிசை யில் அபயன்றான் ஏவிய சேனை தனக்குக்கண், சோழன் என்றும் அதற்குக் கை, கருணாகரன் என்றும் உவமை கூறினார். இங்கு சோழன் எனப்பட்டவன் குலோத்துங்கன் என்பாருமுளர். குலோத்துங்கன் நேரிற் செல்லாது தண்டைப் போக்கி வெற்றி பெற்றான். இதனாற் குலோத்துங்கன் சேனையின் கண்ணாவான் என்பது பொருட் சிறப்புடையதாகாது. கண்ணாகிய சோழன் விக்கிரமனைக் கொள்வது போர்ப் பயிற்சிபெறும் வழக்கிற்கும், மற்றை இளங்கோக்கள் படைத்தலைவர் கண்காணிப்பில் களி றூர்ந்த முறைக்கும் ஒத்ததாகும். கருணாகரன் கண்காணிப்பில் விக்கிரமன் சென்றது உவமையாற் கூறியிருப்பதறிக. இக் கருத்தைக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரும் தழுவியிருப்

பதைக் காட்டுவாம். இது குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் வருவது.

"எஞ்சாவரண்பெரிய காலிங்கமேழுமெழ
முந்நீர்க ளேழு மெனவந்
தேறித் தடுப்பமுனே மாறிக் கலிங்கமேழ்
(பாழ்) போக வென்ற வொருதன்
பஞ்சா யுதங்களி லிவன்சாது ரங்கபல
மூற்றுந் தரைப்ப டவடற்
பாடற் பெரும்பாணி தேடற் கருங்கவி
கவிச்சக்ர வர்த்தி பரவச்
செஞ்சே வகஞ்செய்த சோழன் திருப்பெயரா
செங்கீரை யாடி யருளே"

இப்பாட்டில் பரணிகொண்டவன் திருப்பெயரனென்று இரண்டாங் குலோத்துங்கன் பாராட்டப்படுவதோடு செயங்கொண்டாரும் புகழப்பட்டனர். இதனிற் குறிக்கப்பட்ட போரும் முதற் கலிங்கப் போரென்பது தெளிவாம். கலிங்கர் சதுரங்கப்படை யெல்லாம் கருணாகரனால் தோல்வியுற்றனவென்னாது புலவர் பஞ்சாயுதத்தால் அழிவுற்றதென்றார். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று பெரியாரருளியவாறு குலோத்துங்கனைப் புலவர் திருமாலினம்சமாகக் கருதி அவனுக் குரியதாகும் ஐம்படை வெற்றியுற்றதெனக் கூறவியலும். ஆயினும் குலோத்துங்கன் நேரிற்சென்று போர் புரியவில்லையாகலின் ஈண்டு பஞ்சாயுதம் என்றதால் "ஐம்படைப் பருவத்து வெம் படைதாங்கி" யவனாகிய விக்கிரமன்வென்றான் என்பது பொருந் தும். ஐம்படை நாற்படையை வென்றதென்றதோர் நயமும், நாற்படை இளம்பாலனுக்குத் தோற்றதென்ற சிறப்பும் படக் கூறுவது பொருட் பொலிவுடையதாகும். இஃதொக்குமெனின் கருணாகரனுடன் விக்கிரமன் சென்றது பெறுதும். இது பரணியிலும் கூறப்பட்டிருப்பதை நோக்கிக் கூறப்பட்டதென்ன வேண்டும்.

இனிச் "சோழன் சக்கரமாம்" என்னும் பாடங்கொள் வாருமுளர். இதற்குப்பொருள் சோழனுடைய சக்கரமாம் என்பது (திருவாழியென்க). இப்பொருளுக்குச் சோழன் திரு மாலின் அம்சம் என்பது உட்கருத்தாகும். இஃதொக்குமென் னின் கருணாகரனைச் சக்கரமாக உவமித்த புலவர் வாணகோவ ரையனைப் பாஞ்சசன்னியமாகவும் பல்லவர்கோனைத் தண்டாக வும் கூறியிருப்பர். இங்ஙனமின்மையின் சோழனைத் திருமாலின் அம்சமாகக் கொண்டாரல்லர் என்னலாம். எனவே **சோழனி சக்கரமாங்** கருணாகரன் என்ற பாடம் சிறக்கும்.

இதுகாறும் விக்கிரம சோழன் முதற்கலிங்கப் போருக்குச் சென்றான் என்பது உண்மையென்பதும் அவன் போர்ப்பயிற்சி பெறும்பொருட்டுச் சென்றான் என்பதும் ஐம்படைப் பருவத்தில் வென்றான் என்பது உபசாரமாகும் என்பதும் அறியக்காட்டினும். விக்கிரம சோழன் இளம்பருவத்தில் பிற படைத்தலைவர் துணையின்றி வென்றான் என்பது பொருந்துமாயின் கலிங்கர் போர்த்திறன் இகழ்தற்குரியதாகும். மற்றும் இக்கருத்து பரணியை ஊன்றியுணராதார் கூற்றாய் முடியும். கலிங்கர் போர்த்திறன் தமிழரின் போர்த்திறனுக்குத் தாழ்ந்ததன்றென்பதே பரணியாசிரியர் கருத்தாகும். இதனுண்மை பரணியாற் பெறப்படுவதைக் காட்டுவாம்.

படைத்தலைவர் பின்னணியினின்று மற்றைப் படைவீரரைப்போர் புரிய ஏவுவர். தலைவன் இறந்துபடுவனாயின் படை குலைவுற்றொழியுமாகலின், இங்ஙனமாக கலிங்கரும் தமிழரும் போர்புரியலுற்ற பின்னர் கலிங்கர் மிக்க வீராவேசத்தோடு பொராதகாலை தமிழ்ப்படையே சிதைவுறும்நிலை யெய்தும் போலிருந்தமையின் கருணாகரன் தன்படை வீரருக்கு ஊக்க மூட்டக் கருதிப் படையின் முன்னணியிடைச் சேறலுற்றான் என்பதைக் கவிச் சக்கரவர்த்தி

அலகில் செருமுதிர் போதில் வண்டைய
　　ரரசன் அரசர்கள் நாதன் மந்திரி
உலகு புகழ்கரு ணாக ரன்றனது
　　ஒருகை யிருபணை வேழ முந்தவே

என்னும் அடிகளிற் பகர்ந்துள்ளாரென்க. இதன் பின்னர் தமிழ்ப்படை முன்னினும் மிக்க வலியடைந்தவராகிப்பொரவே கலிங்கப்படை அச்சமுற்று குழப்பமுற்று உடைந்து புறங்காட்டியதைப் புலவர் பின்வருந் தாழிசைகளிற் கூறியிருப்பது அறிக. கலிங்கர் இறுதியில் தோற்றனராயினும் அவர் தமிழருக்குத் தாழ்ந்தவராகாரென்க. இத்தகைய போர்த்திறனுடையோருடன் பொருவதற்குக் குலோத்துங்கன் ஓர் இளம்பாலனைப் போக்கி யிருந்தான் என்பது குலோத்துங்கன் அறிவிற்கு இழுக்கூட்டுவ தாகுமென்க. குலோத்துங்கன் கலிங்கரொடு வயிராகரப்போர் பொருத காரணத்தான் அவராற்றலை நன்குணர்ந்தவனாவன். இதனானன்றே தன்படையொன்றானே வென்று வருவேனென்று கருணாகரன் வீரவாதம் கூறினதைக் கொள்ளாது அவனுடன் வாணகோவரையனையும் பல்லவர் கோனையும் துணையாகப் போக்கினது மென்க. மற்றும் பல

படைகளையும் படைத் தலைவர்களையும் போக்கியதைப் பின்னர்க் காட்டுவாம். கவிச்சக்கரவர்த்தி பிறபடைகளையும் படைத் தலைவர்களையும் கூறுதொழிந்தாரேனும் படைப் பெருக்கை "இலங்கைப் போருக்கு ஒற்றிரட்டிக் கலிங்கப்போர்" என்னும் உவமையில் அடக்கிக் கூறியுள்ளாரென்க. இது சாசனங்களாலும் பிற விலக்கியத்தாலும் புலப்படுவதைக் காட்டுவாம்.

கலிங்கப்போர் புரியப் பரணியிற் கண்ட படைத்தலைவர்களேயன்றி பிற படைத்தலைவர்களும் சென்றிருந்தனர் என்பது அன்னோர் இடர்க்கரம்பையில் ஆற்றியுள்ள பணிவகைகள் சான்று பகருகின்றதைக் காட்டுவாம்.

"புயன்மேவு பொழிற்றஞ்சை முதற்பஞ்ச
நதிவாணன் புதல்வன் பூண்ட
வயமேவு களியானை முடிகொண்டான்
மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன்மேவு தோளபயற் கிருபத்தை
யாண்டதனி னிடர்க் கரம்பைச்
செயன்மேவு மீசர்க்குத் திருநந்தா
விளக்கொன்று திருத்தி னானே."

என்னும் செய்புட்சாசனத்தில்வரும் முடிகொண்டான் என்பவன் ஓர் படைத்தலைவனாவன். இவன் கலிங்கப்போர் புரியச் சென்றிருந்தான் என்பது குலோத்துங்கன் 25-ம் ஆண்டில் இச் சாசனம் பொறிக்கப் பட்டிருப்பதுணர்த்தும். கலிங்கப்போர் குலோத்துங்கன் 25-ம் ஆண்டிற்கு முன்னரே நிகழ்ந்ததாகும் என்பது பெறப்படுகின்றது காண்க. போர் முடிவுற்ற பின்னரும் இப்போர் வீரர்கள் ஆண்டிருந்ததன் காரணம் பிறபகைவரையும் அறவே வலியொடுக்குவதற்குத் தங்கியிருந்தாரென்க. இப்படைத் தலைவன் பெயரான் குலோத்துங்கன் புதல்வனாகிய முடிகொண்டானுக்கு அணுக்கனாகவிருந்தமை புலப்படும். இவன் ஓர் பிரம்மராயனாவான். வத்தர் என்பது வத்ஸன் என்னும் கோத்திரப் பெயரின் திரிபாகக் கொள்ளலாம். பஞ்சநதிவாணன் என்பது ஐயாறுடையான் என்பதன் பரியாயமாகும். இப்படைத் தலைவன் ஓர் வள்ளலாய்த் திகழ்ந்தான்போலும். வீரசோழிய வுரையில் வரும் மேற்கோளாட்சிப் பாடல்களில் வத்தவர்கோ வென்று பாராட்டப்பட்டவன் இத்தலைவனாவனோ வென்பது ஆய்தற்குரியது.

(தொடரும்.)

# கலைச் சொல்லாக்கம்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள், B.A., L.T., ஊரத்தநாடு.

## முன்னுரை

சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள "கலைச் சொற்கள்" எளிதில் விளங்கக் கூடிய காரணப் பெயர்களா யிருத்தலாலும், அரசியலார் பல்கலைக்கழகத்தார் முதலியோரின் ஆதரவு பெற்றுத் திகழ்கின்றமையினாலும் ஆட்சிபெறும் வாய்ப் புடையனவாகும். இவ்வாட்சியை மிகுதிப் படுத்தக்கூடிய வழிகள் மூன்றாகும். இக்கலைச் சொற்களுள் விளங்காதவற்றை விளக்கிப் பயன்படுத்திக் காட்டல் முதலாவதாகும்; இவ்வாறு தொகுத்து விளக்கி இலக்கியங் கண்டவற்றிற்கு இலக்கணம் வகுத்தல் இரண்டாவதாகும்; இவ்விலக்கண விதிகளைப் பயன் படுத்திச் சிறிதுங் குறைபாடின்றித் திருத்தி யமைத்தல் மூன்றாவதாகும். இவ்வாறு, **கலைச் சொல்லாக்கம்** எனும் இந்நூல் முப்பகுதியாக வெளிவரும்.

இதன் முதற்பகுதி **கலைச்சொல் விளக்கம்** எனும் பெயர் பெறும். "கலைச் சொற்க"ளுள் மிகப் பெரும்பகுதி தம்மைத் தாமே விளக்கவல்லனவாயிருப்பினும் சில சொற்களை விளக்கின லன்றி அவற்றின் காரணங்களை எடுத்துக் காட்டினலன்றி எளிதில்விளங்குவன ஆகா. அதனால் அவற்றிற்கேற்ற சுருங்கிய விளக்கம் அல்லது அப்பெயரிடப்பட்டதின் காரணம் ஈண்டுக் கொடுக்கப்படும். இதனால் இவை எளிதில் ஏன்று கொளப் பெற்று உளத்தில் ஊன்றிக்கொள்ளுவனவாகும். இத்துடன் இவற்றை ஆக்கியோரடைந்த ஆனந்த வெள்ளத்துள் ஒரு சிறு பகுதியையாவது இதனைப் படிப்போரும் இச்சொற்களைப் பயன் படுத்துவோரும் அடைதல்கூடும். ஏனெனில் சொல்லாக்கமும் ஓர் கலையேயாகும்; எல்லாக் கலைப்பொருள்களையும் போலவே இக்கலைச் சொற்களும் பிறக்கும் பொழுதே பெருமகிழ்வைத் தந்து பின்னர் நினைத்தொறும், பயன்படுத்துந்தொறும் ஆனந் தத்தேன் சொரிவனவாகும். இச்சொற்களுட் சிலவற்றையுங் குறியீடுகளையும் ஏற்குமுறையில் பயன்படுத்தி வாக்கியங்களுள் அமைத்துக் காட்டினால் இவற்றை எளிதில் வாசிக்கவும் கருத்துட்கொள்ளவுங் கூடுமாதலின் இத்தகைய செயன்முறை

விளக்கமும் (Practical Illustration) ஈண்டுக் கொடுக்கப்படும். தாய்மொழிவழிக்கல்வி கட்டாயமாக்கப்பெறும் இக்காலத்துங்கூட ஆங்கில இடைஉரிச்சொற்களைக் கலந்தே இக்கலைச்சொற்கள் பயன்படுத்தப்படுகிற பெருங்குறையை நீக்க இதுவும் ஓர் வழியாகும்.

இந்நூலின் இரண்டாவது பகுதியில் இக்கலைச்சொற்கள் முறைப்படுத்தவும், வகைப்படுத்தவும், தொகைப்படுத்தவும், உய்த்தறியவும்*பட்டு அறிவியல் முறைக்கு (Scientific Method) உட்படுத்தப்படும். இதனால் கலைச்சொல்லாக்கமுறையும் ஓர் அறிவியல்முறையாகிச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இலக்கண வரம்புடைத்தாகும்; அடிப்படை கோலப்பெற்று உறுதியுடன் விளங்கும். இதனால் இப்பகுதி **கலைச்சொல்லாக்க விலக்கணம்** எனப்படும்.

இவ்விலக்கண விதிகளைத்தழுவி, கலைச்சொற்களுட்சில திருத்தவும் மேன்மைப்படுத்தவும்பெறும். வெகுவிரைவில் வெளியிடநேர்ந்தமையாலும், இவ்வடிப்படைகளை உளத்தமைத்துக் கொண்டே ஆக்கப்பட்டமையாலும் இக்"கலைச்சொற்க"ளுட் சில குறைபாடுகள் காணப்படுதல் இயல்பேயாகும். இவை மூன்றும்பகுதியாகிய **கலைச்சொற்றிருத்தம்** என்னுந் தலைப்பின் கீழ் நீக்கப்படும்.

இவ்வாறு முப்பகுதியாக வெளிவரும் இந்நூலுள் ஒவ்வொரு பகுதியிலும் ஏனையபகுதிகளின் செய்திகள் விரவி வருதலைக் காணலாம். அவற்றின் ஏற்புடைமையை ஆண்டாண்டுக் கண்டுகொள்க. இந்நூல் பலவகையிலும் ஓர் புதுநூலாகுமாதலின் இதனை மேன்மைப்படுத்தும் வழி காண்பிப்போருக்கு நன்றிசெலுத்தப்படும்.

* By the process of arrangement, classification, deduction and induction

# காரைக்கால் அம்மையார் கணவன் நிலை

திரு. அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் M.A., அண்ணாமலைநகர்.

தமிழ்ப்பொழில் துணர் 15, மலர் 11-இலும், 12-இலும், இத்தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில செய்திகளை நோக்கி எழுவது இக்கட்டுரை. "அவை யனைத்தையும் ஒப்புநோக்கி உண்மை காண்டல் அறிஞர் கடன் ஆகும்" என்று அங்கு எழுதப்பட்டிருப்பது இதற்கும் ஏற்கும்.

பழமளித்த பாவையார் என்னும் முன்னைய கட்டுரையில், பரமதத்தன் இழிதகவே உடையவன் என்று எழுதப்பட்டிலது. எழுதப்படாமல் இருந்தும், காரைக்கால் அம்மையாரின் கணவன் நன்மக்கட்கு உரிய நல் இயல்புகள் வாய்க்கப் பெறுத வன் என்று அக்கட்டுரை முடிவு கூறிவிட்டதாகப் பின்னையகட் டுரையாளர் 415-ஆம் பக்கத்தில் எழுதியிருப்பது உண்மை யன்று. மற்றும், "புனிதவதியாரைச் சுற்றத்தார் கொண்டு வந்து விட்டபோதும் அவர்காலில் விழுந்து வணங்கியது அவன் இழிதகையோன் என்பதை யன்றோ காட்டுகின்ற தெனின்" என்று 420-ஆம் பக்கத்தில் எழுதப்பட்டிருப்பது பழமளித்த பாவையார் என்னும் ஏழாம் மலர்க்கட்டுரையில் எழுதப்பட்ட தெதனையும் மறுத்தது அன்று; அக்கூற்று முன்னைய கட்டுரையில் யாண்டும் வந்திலாமையின். மேலும், 464-ஆம் பக்கத்தில் "இறைவன் திருவடிப்பேறு சிவநெறி நின்றார்க்கல்லது பிறர்க்குக் கூடாமையால் அதனை அடையாததுபற்றி அவனை உலகநெறி யாகிய நல்லொழுக்கம் இலன் என்று..................கூறுதல் சாலாது," என்று எழுதப்பட்டிருப்பதும் எனது பழைய கட்டுரையில் வந்த எப்பகுதியையும் மறுத்தது அன்று, கூறப் பட்ட இவ்வாக்கியமும் ஏழாம் மலரில் என்னால் எழுதப்பட்டி லாதது ஆகலின், இவற்றைப்போன்று நான் கூறுத சிலவற் றைக் கூறியனபோற் கொண்டு அவற்றிற்கு மறுப்பு எழுது மாறு போலப் பதினோராம் மலர்க் கட்டுரையாளர் எழுதியுள்ள சிலவற்றிற்கு நான் விடையிறுக்கும் கடப்பாடு உடையே னல்லேன். இக்கருத்துக்கள் எனக்கின்றி என்போன்றார் பிறர்க்கு இருத்தல் கூடும் என்று எதிர்பார்த்து அவற்றிற்குச் சமாதானம் கூறுவனபோல் எழுந்தன இவ்வாக்கியங்கள் என்று கருதி அவற்றை விடுப்பல்.

நான் கூறியன பரமதத்தன் பொய்ம்மையுடையன், தன்னலங் கருதுபவன், ஒரு கடவுள் வழிபாடு இலாதவன் என்பனவேயாகும். அவற்றிற்கு வேண்டிய சான்றுகள் ஏழா மலர்க் கட்டுரையில் என்னாற் காட்டப்பட்டுள. அவற்றிற்கு மாறுகப் பதினோராம் மலர்க் கட்டுரையாளர் கூறியுள்ளவற்றை ஆய்வதே எனது நோக்கம்.

"அம்மையாரது தந்தை வாய்மையினில் ஊனமில் சீர்ப் பெருவணிகர் தங்கள்குலத் தலைவனர்" எனவும், பரமதத்தனுடைய தந்தை முதலியோர் "இவர்கள் மரபினிற்கு ஏற்கும் தொல் குலத்து வணிகர்" எனவும் கூறப்பட்டிருத்தலால், அம்மையாரது குலமும், பரமதத்தனது குலமும், வாய்மையினில் ஊனமின்மை உடையன என்றும், அதனால் பரமதத்தனும் அத்தகைய உயரிய பண்பு உடையவன் என்றுஞ் சேக்கிழார் கருதினர் என்பது பெறப்படும் என என் நண்பர் எழுதியுள்ளார். ஆனல், சேக்கிழார் காரைக்காவில் உள்ள வணிகர் குடிகள் வாய்மையினில் ஊனமில் சீர் உடையன எனப் பொதுவாகக் கூறியமை "வாய்மையினில் ஊனமில் சீர்ப்பெருவணிகர் குடிதோன்றி ஓங்குபதி ......காரைக்கால்" என்று முதற் பாட்டின்கண்ணே கூறியுள்ளமையால் விளங்கும். அவ்வணிகர் தம் குலத்தலைவனர் தனதத்தர் எனவே இரண்டாம் பாட்டில் கூறியுள்ளார். அக்குடியில் வந்தமையாலோ பிறவாற்றாலோ அம்மையார் வாய்மையுடையராய் இருந்தார் என்ற அளவே சேக்கிழார் பாட்டுக்களால் அறிவோமன்றி, அவர் கணவன் வாய்மையுடையன் என்று "ஏற்றமரபு" என்றதனால் நினைப்பதற்கு இடமில்லைபோல் தோற்றுகிறது. மகட்பேச வரவிட்டார் மகட் கொள்ளுதற்குரிய மரபினர், வழியினர் என்பதே "இவர்கள் (தொல்) மரபினிற்கு ஏற்கும் தொல் குலத்து வணிகர் மகட் பேசுதற்குத் தொடங்குவார்" என்ற சொற்களால் அறியப்படும். அதற்குமேல் எதுவும் கூறுதல் வலிந்துரைத்தலாம் என்க. இதனல், மணமகன் குலமும் மணமக்கள் குலமும் ஒத்தன என்ற காரணம்பற்றிப் பரமதத்தன் வாய்மையுடையன் என்று கூறுதல் பொருந்தாது என்பது வெளியாம். அன்றியும், "குல மைந்தன்," "தனிப் பெருமகன்" என்று அவன் கூறப்பட்டிருப்பதுகொண்டு, அவனை வாய்மையாளன் என ஆசிரியர் சேக்கிழார் மதித்தார் என்று கூறவொண்ணுது. ஒரு குலத்தில் தோன்றியோரில் ஒருவர் நல்லர் ஆகவும், ஒருவர் அல்லர் ஆகவும் இருத்தல் கண்கூடு. விசாரசருமர் சிவபூசைநேயர் ஆகவும் அவரை ஈன்ற தாதை எச்சதத்தன் அஃது இல்லாகவும்

இருந்தது சண்டேசுர நாயனர் புராணத்தால் அறியப்படும். இதனல் ஒரு குடி வாய்மையுடையதாயின் அக்குடியில் வந்தோர் வாய்மையுடையோராய் இருத்தல் வேண்டும் என்று வாதித்தல் பொருந்துவதன்று என்பது புலனும்.

"பரமதத்தன் புனிதவதியாரை விட்டோடியதும், வேற்று நாட்டிற் சென்று இரண்டாவது மனைவியை மணந்துகொண்டு அங்குதானே தங்கிவிட்டதும்....................அவன் இழிதகையோன் என்பதை அன்றோ காட்டுகின்றன எனின், அவன் பெருந்தகையோன் என்பதைக் காட்டுவன வன்றி, இழிதகையோன் என்பதைக் காட்டுவன ஆதல் யாங்ஙனம்?" என வாதிக்கிருர் நண்பர். புனிதவதியாரை விட்டு ஓடியது இழிதகவுடைமை என நான் முற் கட்டுரையில் எழுதவில்லை. அவரை விட்டு ஒழிவதே எண்ணமாகச் சென்றவன், இனி மீண்டு வருதல் நோக்கமிலாது சென்றவன், செல்லுங்கால் "விழுநிதி கொணர்வேன்" என்று கூறிச் சென்றதாற் பொய்ம்மையுடையன் என்ற அளவே நான் கூறியது. (பக்கம் 250 பார்க்க.) (காரைக்கால் அம்மையார் புராணச் செய்யுள் 32, 34, 35 பார்க்க.) போகுங்கால், மீண்டு வருவதாகப் பரமதத்தன் சொல்லிச் சென்றதற்கு நண்பர் சமாதானம் ஒன்று சொல்லியுள்ளார். அஃதாவது, பிரிவதாகச் சொல்லின் சுற்றம் என்னும் தொல் பசுக் குழாங்கள் பற்றி இழுத்து இருவரையும் உடன் உறைந்து வாழச்செய்யும் என்று கருதியமை என்பது. ஆனல், அதற்கு அஞ்சி மீள்வேன் என உரைத்ததே பொய்ம்மை என்க. இப்பொய்ம்மை, "புரைதீர் நன்மையைப் பயப்பது கருதியது ஆகலின் வாய்மை யிடத்தது" எனச் சமாதானம் கூறுகின்ருர் அவர். அது பொருந்துமா?

"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று திருவள்ளுவர் கூறினரேனும், இதைப் போன்ற இடங்களுக்கு அக்குறட் பாக்களைப் பயன்படுத்திக் கொள்ளுதற்குக் கூறினரல்லர். புரைதீர் நன்மை என்பது தனக்கு வரும் நன்மை என்ற பொருளில் வள்ளுவரால் பேசப்பட்டிலது. பிறர்க்கு நன்மை பயப்பதாய் இருந்தால், அதுவும் குற்றமற்ற நன்மை பயப்பதாய் இருந்தால், பொய்ம்மையும் வாய்மையின் பாற் பட்டதென்று அவர் கருதியமை பரிமேலழகர் உரையாலும் விளக்கமாம். அங்ஙனமே, "தீமையிலாத சொலல்"

என்ற இடத்துத் தீமை எனப்பட்டது பிறர்க்கு வருந் தீங்கு என்ற பொருளில் வைக்கப்பட்டுள்ளது. அன்றேல், பொய் கூறுவோன் எவனும் தனக்குத் தீங்கு நேராமை குறித்துக் கூறினேன் எனவும், எனக்கு நன்மை பயக்குமாதலிற் கூறினேன் எனவும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்வன். ஆயின், வாய்மை என ஓர் அறம் பேசப்படவேண்டிய அவசியமின்றி ஒழியும். இம்முறையே, பரமதத்தன் செய்தியை நோக்குவோம். மனைவியை விட்டுப்பிரிந்தது மனைவிக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற காரணத்தான் அன்றித் தான் உய்ய வேண்டும் என்ற காரணத்தான் ஆகலின், அவன் பொய்ம்மை புரைதீர் நன்மை பயந்ததன்று. அவன் நன்மை கருதப் பட்டது என்பது பெருநிதி திரட்டியபின் பாண்டி நாட்டுப் பதியொன்றில் தங்கி மற்றொருத்தியை மணந்து கொண்டமை யாலும், அவளிடத்து "முன்னை அறலியல் நறுமென் கூந்தல் அணங்கனாள் (=புனிதவதி) திறத்தில் அற்றம் புறம் ஒரு வெளியுறாமல் போதிந்த சிந்தனையினோடு" ஒழுகியதாலும் பெறப்படும். இவ்வாற்றால், வரலாற்றை நோக்கின் பரம தத்தன் பொய்ம்மையுடையன் எனச் சேக்கிழார் காட்டியுள்ளார் என்பது பெறப்படும்.

பரமதத்தன் தன்னலம் கருதினவன் என்று எழாமலர்க் கட்டுரையிற் காட்டினேன். (பக்கம் 249 பார்க்க) கனி ஒன்றன் பின் சுவை ஆராமையால் ஒன்று பெற்று அயின்றதுவும், மூன்றாங்கனியையும் பெறக் கைநீட்டியதுவும் அவன் தன்னலத்தைக் குறிப்பன என்று அங்குக் கூறினேன். அதற்கு நண்பர் கூறுஞ் சமாதானம் இறைவன் திருவருட்செயலாலே கேட்டான் என்பது. எனின், திருவருட்செயலான் தன்னலம் உடையன் ஆயினான் என்றும். ஆனால், திருவருளால் அவன் கேட்டான் என்று சேக்கிழார் கூறினாரல்லர். திருவருளால் நிகழ்ந்ததெனை ஆசிரியர் கருதியிருப்பின் "நம்பர் அருளாமையினால்—— அமண் சமயம் குறுகுவார்" (செய்யுள் 37.) என்றும், "ஈசர் அருள்கூடுதலால் —— திலகவதியார் தாள் சேருவன் என —— திருவதிகை யணைவதனுக்கு —— துணிந்து எழுந்தார்" (செய்யுள் 59—60) என்றும் திருநாவுக்கரசர் புராணத்திலும், "அருளால் எங்குக்காணா" (செய்யுள் 77) என்று சிறுத்தொண்டர் புராணத்திலும் பிறாண்டுங் கூறியுள்ளவாறுபோலக் கூறியிருப்பர். ஆகவே, கேட்ட குற்றம் பரமதத்தனது இயல்பால் நிகழ்ந்ததன்று என அரிதில் முயன்று நண்பர் வாதிக்குங் கட்சி இடர்ப்படுதல் காண்க. பழம் ஒன்றுமன்றி மூன்றுமன்றி

இரண்டேயானதும், அடியார் ஒருவர் பசியுடையராய் வந்ததும், அவருக்கு ஒரு பழம் படைத்ததும், பரமதத்தன் ஒன்றின் மேல் ஒன்று கேட்டதும் திருவருளால், திருவருளால் எனக் கூறி முடிக்கின்றார் நண்பர். இது, முன் ஒரு பொழிவிடைத் தமியராய்க் கண்ட காதலர் இருவரிற் றலைவியைப் பிறிதோர் கானவிடம் மற்றை நாட் கொண்டு செலுத்தாது பழம்பொழி விடையே கொண்டு செலுத்தும் விதியென்றும், பண்டைய கூட்டம் தாய்க்குப் புலனாகாமைக் காக்கும் விதி என்றும் தலை மகளது வேறுபாட்டைத் தோழிக்குப் புலனாகாமைக் காக்கும் விதி என்றும் விதியின் மேல் ஏற்றி உரைக்கும் ஒரு சார் கொள்கையை அடியொற்றியது. விதிக்குக் காரணம் கூறற் பாற்றன்று என இறையனார் அகப்பொருளுரையுடையார் கூறியதுபோலத் திருவருளுக்குக் காரணம் கூறுந்தகைத்தன்று எனச் சொல்லிப் பிறர் வாயை மூடக் கருதுதல் அறிவிற்கும் ஆராய்ச்சிக்குங் குழிதோண்டுதல் என்க.

பழம் இரண்டையும் பரமதத்தன் உண்ணக் கருதினன் ஆயின் அவனது தொழினிலையத்தின் கண்ணே அயின்றிருப்பன் என்றும், அங்ஙனம் உண்ணுமையின் மனைவி முதலான பிற கிளைஞரும் உண்ணல்வேண்டும் என்னும் கருத்தானே இல்லத் திற்கு அனுப்பினான் என்றும் நண்பர் எழுதியுள்ளார். "வாணி பத்துறையில் தானே அயின்றிருப்பன். ஆண்டு அவனுக்குப் பெரிய தடை ஒன்றும் இல்லை," என்று 423-ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது பொருந்துமா? அவனுக்குத் தடை இருந்த துண்டு என்று ஊகித்தறியலாம். அத்தடையாவது வாணிபத் துறையின் கண்ணுள்ள பலர்முன் எல்லாக் கனிகளையுந் தானே உண்டு வீட்டிற்கு ஒன்று தானும் அனுப்பாதிருந்தான் என்னும் பழிச்சொல் எழும் என்பதே. இதனால் அறியத்தக்கது அவன் தன்னலம் உடையனாய் இருந்து கொண்டும் அதனைப் பிறர் பலர் அறியலாகாது என்று அதற்கேற்ப நடந்துகொள்ளும் முயற்சி யுடையவன் என்பதே. அதனாலன்றே, "இல்லத்துக்கொடுக்க" (செய்யுள் 16) என்றுகூறி அனுப்பிய "மாங்கனிகளைக் கணவன் மனையிடை வைப்பித்த மாங்கனி" (செய்யுள். 23) எனச் சேக் கிழார் உரைத்துள்ளார். அவன் "கொடுக்க" என்று சொல்லி யனுப்பினனாயினும் அதற்குப் பொருள் "வைக்க" என்பதை அவனோடு நெடுநாள் பழகிய அம்மையார் அறிந்திருந்தார். இதன் உண்மை "இல்லாளன் 'வைக்க' எனத் தம்பக்கல் முன் னிருந்த நல்ல நறுமாங்கனிகள்" (செய்யுள் 20) என்ற சேக் கிழார் வாக்கால் உணரப்படும். ஆதலின் "இல்லாளன் வைக்க

எனவும், கணவன் வைப்பித்த எனவும் பரமதத்தன் கனிகளை வைக்கும் குறிப்புடையான் போன்று கூறியது அம்மையார் கருத்துப்பற்றி என்க" (பக்கம் 460) என்று நண்பர் எழுதியுள்ளது பொருத்தம் உடையதாகாதென்க.

ஒரு கனியை இட்டபின், மறுகனியைக் கேட்டக்கால், அவன் விருப்பம் அறிந்தும் அவ்வுணவுப் பொருள் கொடுக்க மாட்டாமை கற்புடை மகளிர்க்குக் கலக்கம் விளைத்ததால், அடியார்க்கு இட்டதைக் கூறாது நின்றயர்ந்தார் என்றவாறு 461-ஆம் பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. கணவன் கேட்டபொருளை முட்டின்றிக்கொடுக்க மாட்டாமைக்காக அம்மையார் வருந்தியது உண்மையானால், மற்றுமோர் கனி "அழைத்தளிப்பாய்" எனக் கணவன் கேட்டகாலையில், "என் கொழுநன் வருந்துகின்றார். அவர் வேட்கை தீர இன்னம் ஒரு கனி அருளல் வேண்டும்" என்று அம்மையார் கேட்டிருப்பர். அங்ஙனங்கேளாது, "ஈங்கு இது அளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்" (செய்யுள் 30) என்று கூறினர் ஆதலின், கணவனது குறைவை நிறைவு செய்யுங் கருத்தாலன்றி வாய்மையின் ஆர்வத்தால் கூறினர் ஆதல் வேண்டும்.

மூன்றுங் கனியையும் அவன் உண்டிருப்பன் அது மறையாது இருந்திருக்குமாயின் என நான் முன் எழுதியதுண்டு. (பக்கம் 249). அதனை மறுக்க முற்படுகிறார் நண்பர். அதற்கு அவர் கூறுவது "அயின்று" என்ற சொல்லால் "சிறிதே உண்டு பார்த்து" என்ற பொருள் கிட்டுமாகலின் அவன் இரண்டாங் கனியையே முற்ற உண்டிலன் ஆகலின் உண்டிரான் என்பது. 'அயின்று' என்ற சொல்லிற்குச் சிறிதே உண்டு பார்த்து என்ற விளக்கம் இந்நண்பர்பாற் கேட்டோமன்றிப் பண்டை உரையாசிரியர்களாகிய சேனாவரையர், சிவஞான சுவாமிகள் முதலியோரிடமுங் கேட்டோமில்லை. தொல்காப்பியச் சொல்லதிகார 46, 47-ஆம் சூத்திரங்களின் உரையாலும் நன்னூல் 389-ஆம் சூத்திர உரையாலும் அயின்று என்ற சொல் உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன ஆகிய எல்லா வினைகளையும் குறிக்கவரும் பொது வினைச்சொல் என்பதே நம்மனோரால் அறியப்பட்டது. பழத்தின் சதையை உண்டும், தோலைத்தின்றும், சாற்றைப் பருகியும் நக்கியும், கனியை மிசைந்ததால் அயின்று என்ற சொல்லாற் சேக்கிழார் குறித்தார் என்று கூறலாமேயன்றிச் சிறிது உண்டு பார்த்து என்ற பொருளில் அச்சொல்லை வழங்கினர் என்று கொள்ள அடியேன் மனம் இடந்தரவில்லை.

முழுதும் உண்டான் எனினும் அப்பழத்தின் சுவை வேற்றுமை கண்டு அதனை இன்னதெனத் துணிதற்பொருட்டு உண்டான் எனவும், சுவை மேலீட்டால் உண்டான் எனவுங் கோடல் அமையும் என எழுதியுள்ளார் நண்பர் (பக்கம் 461). அவன் அப்பழம் இன்னதெனத் துணிதற்கு உண்ணினும் முற்றவும் உண்டது குற்றமேயென்க. அரைகுறையாய்உண்டு அப்பழத்தின் திறத்தைத் துணிதற்கு இயலாதவன் முழுதும் உண்ட பின்றுனும் துணிதற்கு இயல்வனோ? சுவைமேலீட்டால் முழுதும் உண்டான் என்று நண்பர் கூறியிருப்பது அவன் வழுவைச் சிறிதாக்க உதவுவதன்று. அனைத்துந் தின்னும் யாவரும் தாந் தாம் உண்ணும் பொருளின் சுவை மேலீட்டாலும் வாயுணர்வைத் தாந்தாம் அடக்கலாற்றுமையாலும் உண்கின்றுர் என்பதே உண்மை. அக்கூட்டத்தாருள் பரமதத்தனும் ஒருவன் என்று யான்முன்னர்ப் பகர்ந்ததன்றி வேறொன்றுங் கூறினேனல்லேன். எனவே, அவன் தன்னலம் உடையவன் என்று நான் உரைத்ததற்குத் தக்கமறுப்புக் கூறப்பட்டிலதென்க.

அது போலவே, ஒரு கடவுளையே வழிபடுகின்ற பெற்றி அவன்பாற் காணப்பட்டிலது என்று நான் முன்னர்க் கூறியதும் மறுக்கப்படாது நிற்கிறது.

வேறொருத்தியைத் தன் கணவன் மணந்துள்ள செய்தியை அறிந்ததும் அம்மையாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது என்றேன். (பக்கம் 252) அதற்கு ஆதாரமாக, "ஈங்கு இவன் குறித்த கொள்கை இது" என்று அவர் வாக்கிற் சேக்கிழார் வைத்துக் கூறியதைக் காட்டினேன். நண்பர் அவனைக்கணவன் எனக் கருதாது பொதுப்பட நோக்கிக் கூறினுர் உலகியலைத் துறந்த அம்மையார் என்று வாதித்துள்ளார். மற்றொருத்தியை மணந்ததற்காக அவர் கோபம் கொண்டாரென்பது உண்மையானுல் காரைக்காலிலிருந்து புறப்படுமுன்னரே சினந்து சொல்லியிருப்பார் என்பது அவரது கட்சி (பக்கம் 462) ஆனுல், அவன் மறு முறை மணந்துள்ளமை "யான் உமது அருளால் வாழ்வேன், இவ்விளங் குழவிதானும் பான்மையால் உமது நாமம்" (செய்யுள் 46) என்று பரமதத்தன் சொல்லிப் பணியுங்காலும் அம்மையாருக்குத் தெரியாது. அம்மையாருடைய சுற்றத்தார் அவனதுநிலை முழுதுங் கேட்டு மம்மர்கொள் மனத்தர் ஆயினரன்றி அம்மையார் அறிந்திலரென்பது 40, 41-ஆம் செய்யுட்களாற் புலனுகும். எனவே, அம்மையார் முன்னரே வெகுண்டிருக்க வேண்டுமென்றிப் பின்னர் வெகுண்டி

ரார் என நண்பர் கருதுவது பொருந்தாதுபோல் தோற்றுகிறது. "இறைவன் திருவருள் பெற்று இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்ருகக் காணும் இயல்புடையார்க்கு வெகுளியுந் தீய கூற்றும் அமையா ஆதலின், அத்தகைய அம்மையாரைச் சீறி விழுந்து சிறுசொற் கூறிஞர்எனல் வேண்டா" என நண்பர் எழுதியுள்ளார். (பக்கம் 463). ஆனல், மனம் தூயவராயும், அறமே பேணிய ஒழுக்க விழுப்பம் உடையவராயும் நிலவிய திருஞானசம்பந்தர் வெகுண்டது உண்மையாளுல், அம்மையார் வெகுண்டிருத்தல் நிகழக் கூடியதொன்றன்று எனக் கூற வொண்ணுது. சமணர் மடத்தில் தீயிட்டபிற்பாடு "அச்சம் முன்புற, முனிவு பின்புற்ருர் முத்தமிழ் விரகர்" என்று திருஞானசம்பந்தர் புராணத்தால் (செய்யுள் 703) அறிகின்ருேமாதலின், அவர் முனிவுகொண்டது மெய்ம்மையே என்க. அது போல், பரமதத்தன்பால் வெகுண்டார் அம்மையார் என்பதில் வியப்பொன்று மின்று. தீக்கொளுவிய சமணரைப் "பாவிகள்" என்ருர் சம்பந்தர் (செய்யுள் 702). இதைப்போன்று எளிய முறையிலேயே அம்மையாரும் கணவனை 'இவன்' என இகழ்ந்துரைத்தார். முனிவுகொண்டு முத்தமிழ் விரகர் தீப் பிணியைப் பாண்டியனுக்கு ஆகுக எனச் சபித்ததுபோன்று அம்மையார் கணவனைச் சபியாதுவிட்டது போற்றுதற்குரித்து என்க. இதனுல், அம்மையார் கோபித்தாரென்று கூறலாகாது என்னும் நண்பர்தங் கட்சி நலிவடைதல் காண்க. இவன் என்ற சொல்லைப்போன்ற சொல்லின் குறிப்பினுல் கவிஞர் இகழ்ச்சியைக் குறித்தல் உண்டென்பது,

> "எனைத்துணைய ராயினும் என்னும் தினைத்துணையுந்
> தேரான் பிறனில் புகல்"

என்ற பொய்யாமொழியாலும் உணரப்படும்.

"இறைவன் திருவடிப்பேறு சிவநெறி நின்ருர்க்கல்லது பிறர்க்குக் கூடாமையால் பரமதத்தன் அதனை அடையாதது பற்றி அவனுக்கும் அவன் மனைவியாருக்கும் மன ஒருமை இல்லை என்று கூறுதல் சாலாது" என்று நண்பர் எழுதியுள்ளார். திருவடிப்பேறு கூடாததால் மன ஒருமை இருந்திலது என்று கொள்ளுதல்வேண்டும் என யான் யாண்டும் எழுதவேயில்லை. ஆகவின், நானெழுதாததை எழுதியதுபோற் கொண்டு பிழைபடக் கூறப்படும் உரைகளுக்கு உலகு என்னிடமிருந்து விடையெதிர்பாராது என்பது ஒருதலை. ஆனல், நான் கருதியதோ மன ஒருமை இருவர் தம்முள்ளும் இல்லாததாற்போலும் பரம

தத்தன் இறைவனடி அடைந்திலன் என்பது. கணவனும் மனைவியுமாக ஒருங்கியைந்து தொண்டியற்றி இறைவன்தன் எழிலடி அடைந்ததாகத் திருநீலகண்ட நாயனார் புராணம், இயற்பகை நாயனார் புராணம், இளையான் குடிமாறன் நாயனார் புராணம், அமர்நீதி நாயனார் புராணம், அரிவாட்டாய நாயனார் புராணம் முதலானவற்றுள் கூறப்பட்டுள்ளதுபோலக் காரைக் காலம்மையார் புராணத்திற்கூறப்பட்டிலது என்பதை எடுத்துக் காட்டவே அடியேன் கருதி "இருவரும் இறைவனை அடைய முடியாமல் அம்மையார் மாத்திரம் அன்று அவன் கழற்போது கூடினாரென்க" (பக்கம் 252) என்று அக்கட்டுரையை முடித்தேன்.

அக்கட்டுரையைப்பற்றி என் நண்பர் "தமிழ்ப்பொழில்" ஐப்பசித்திங்கள் மலரில் 'பழமளித்த பாவையார்' என்னுந் தலைப்பின்கீழ் வெளிவந்துள்ள ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையானது பல அறிஞர்களது அறிவைத் தூண்டியிருக்கும்" எனவெழுதித் தம் கட்டுரையைத் தொடங்கியுள்ளார். அவர் கட்டுரையில் எழுதப்பட்ட சிலதடைகளுக்கு அடியேன் சிற்றறிவிற்கு ஏற்றவாறு விடைபகர்ந்தேன்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

உ

# வாழ்க்கைச் சித்திரமே இன்பச் சித்திரம்

எவனொருவன் தனது துணிவுடைச்செயலால் பொருளையும் ஆற்றலையும் ஈட்டுகின்றானோ அவனே வாழ்க்கையில் வெற்றியுற்றவன் என நினைந்து மனிதர் அவனிடம் பொறாமை கொள்கின்றனர். அவன் படைத்த பொருள் என்னிடம் இருக்கலாகாதா எனக் கருதுகின்றனர். இவ்வாறான வாழ்க்கை வெற்றியை எய்திய மனிதரே இன்பப் பேற்றினை அடைந்தவர் என நினைக்கப்படுகின்றனர். உண்மையாகவே, வெற்றியிற் காணும் இன்ப நிலையினும், வெற்றியைக் குறித்த போராட்டத்திற்றான் ஊக்கமும் நம்பிக்கையும் மிகுந்திருக்கின்றன.

பணப்பெருக்கம் ஒன்றுமட்டுமே போற்றத் தக்கதொன்றல்ல; நிலைபெற்ற இன்பப்பேற்றினை விளைப்பதுமல்ல. உலகப் புகழ்கொண்ட மனிதர் பலர் ஆற்றொணாத் துன்பமெய்தித் தனிமையில் இறந்தொழிந்திருக்கின்றனர்; அவர்கள் பொருள் மிகப்படைத்தவர்; வாழ்க்கையில் வெற்றியுற்றவர்; இன்பப் பேறடைந்தனரா? இல்லை; இல்லவேயில்லை.

அத்தகைய மனிதர்கள், தமது உற்றார், ஊரவர் முதலியவர்களுடன் தொடர்பற்றவராய், தமது தொழிலும் தாங்களுமாய்த் தொழிலிடையே மறைந்துகொள்ளுகின்றனர். சிலவேளை தமது தொழில்முயற்சியே தம்மால் தாங்கவொண்ணாத சுமையாய் விடுகின்றது. உள்ளமும், உரனும் உடைந்து மடிகின்றனர்.

இவ்வாறான வாழ்க்கையின் முறிவை உலகம் உணர்வதில்லை; அவனிடம் எத்துணைச் செல்வம் இருந்தனவென்று மக்கள் வியந்து பாராட்டுகின்றனர். அஃது உண்மைதான். ஆனால் அவன் இழந்தது எம்மட்டு! இதுதான் இரங்கற்பாலது.

செல்வத்துப் பயனாவது அதனைச் செவ்விய நெறியறிந்து செலவிடும் வித்தகத்திறனைப் பொறுத்ததாகும். நாம் எத்துணைப்பொருளைத் தொகுத்தோம் என்பது பொருட்டல்ல; அதனை யாது செய்தோம் என்பதே கருதற்பாலதாம். இன்பம் விலைமதிக்க முடியாதது; பொன்னைக் கொடுத்தும் வாங்க முடியாதது. ஆனால் நமக்கும் பிறர்க்கும் இன்பப்பேற்றினை அளிக்க வல்ல முறையில் பொருளைச் செலவிடலாகும்.

கட்டித் தங்கத்தின் மதிப்பென்னை? பொன்னைத் திரள் திரளாகத் தேடிக் குவிக்கும் அமெரிக்காவின் ஐக்கிய நாட்டிலும், பிரஞ்சுதேசத்திலும் நிகழ்வதை உன்னிப்பாருங்கள்! ஏதேனும் சுகபோகம் விளைந்ததா?

செல்வரானாலும், வறியரானாலும், ஒரு பொருளில்மட்டும் நாட்டத்தைவைப்பது வாழ்க்கையாகாது. மற்றெதனையும் கருதாது ஒன்றினிடத்தே தமது கருத்தனைத்தையும் செலுத்தும் அறிவிலிகள், தமது நுண்ணறிவிற்கென ஒரு சிறைக்கோட்டம் வகுத்துக்கொண்டவர் ஆவர்.

முதலில் உடல்நல நிலையைக் கருதலாகும். உடல்வளைப்புத் தீருதற்கான இயற்கை முறைகளைக் கையாளவேண்டும். இன்றேல் நமது உடற்றொழில் சோர்வுபடும். உடல்நலத்தைப் பேணாத கவனக்குறைவால், உடலுறுப்புகள் ஊனமுறும்; உள்ளச் சோர்வும், ஊக்கக் குறைவும் நிகழ்ந்து மனக்கருவியும் ஊறுபடும்.

உடலுழைப்புள்ளவிளையாட்டுகளால் நமது உடலைப்பேணிக் கொள்ளலாம். நடத்தல், குதிரையேற்றம், நீர்விளையாட்டு, ஓட்டம் முதலிய ஆடல்கள் உள்ளக்கிளர்ச்சியை விளைப்பன. இவற்றால் உடல்நலமேயன்றி வேறு பலநன்மைகளும் விளைவனவாகும். தக்க மனிதரின் தோழமை மனிதவாழ்வுக்கு இன்றியமையாதாதலால், விளையாடலின்பயனை முற்றுமடைதற்கு மனிதத் தோழமையும் வேண்டுவதாகும்.

பொன்னின் தேட்டம் ஒன்றைக்கருதி மற்றெவ்வெவற்றையும் நெகிழவிடுபவர் கொன்னே வாழ்க்கையில் கேடுறுபவராவர். தாம் முயன்றுதேடும்பொற்பரிசுகைவரப்பெற்றமாத்திரத்தில், ‘நாம் விழையும் நலங்கள்யாவும் நம்மைச் சென்றடையும்’ என்று தவறாக எண்ணுகின்றனர். பொருட்சேர்க்கையெனும் வாழ்க்கைக்குறிக்கோள் கைகூடுகின்றது. அதுகாலை தாம் தன்னந்தனியராய் நிற்கின்றனர். தமக்கு உற்றாராகவும், நட்பினராயுமிருந்தோர் தம்மை அணுகமுடியாதபடி கீழ்நிலையில் நிற்கின்றனர்; பின்னர் அகன்று மறைகின்றனர். குடும்பவாழ்க்கையில் பயின்றறியாது பேதுறுகின்றனர்; கலைநலங்களும், உளப்பண்புகளும் அறியாது வாழ்க்கைப்பயனைத் துய்க்கமுடியாது வறிதே கழிகின்றனர்.

தான் தொட்டவை அனைத்தையும் பொன்னாக மாற்ற அறிந்து ஆக்கிய பொன்னை அதனினும் சிறந்த பிறிதொன்றும் ஆக்கமுடியாத வரத்தினைப்பெற்ற **மைதாஸ்** என்பானை ஒத்தவராகின்றனர். பொருள்செய்யும் முறைகளிற் கைவந்த ஒருசிலர் தமது தொழின் முயற்சிகளையே விளையாட்டாகக்கொண்டு மனக்கிளர்ச்சி அடைகின்றனர். எந்தத் தொழிலிலும் மக்கட்பண்புகட்கும் இடமுண்டு; மனக்கிளர்ச்சிக்கும் இடமுண்டு;

நம்பொருட்டாகத் தொழில்புரியும் பணியாளர்களிடம் அருளிரக்கங்கொண்டு ஒப்புரவுசெய்யலாம்; அவர்களின் துன்பந்துடைப்பதால் யாம் அடையும் இன்பநிலைக்கு எல்லையும் உண்டோ? நமது தொழிற்சாலைகளில் பணிபுரியும் உழைப்பாளிகளின் நலங்கருதி மருத்துக்கூடம், பசுமடம், பாலகர்பள்ளி, கலைக்கூடம், இன்பக்களரி, பூங்காவனம் முதலிய வசதிகள் அமைத்து அன்னவர் இன்முகங்கண்டு உவத்தலினும் சிறந்த இன்பப்பேறு யாதுளது?

எந்தத் தொழின் முயற்சியிலும் பெறவொண்ணாத அளவு பெரும் பொருளை இற்றைநாளில் சிலர் குதிரைப் பந்தயம் முதலியவற்றில் எளிதே பெறுகின்றனர். அவருட்சிலர் பொட்டலிற் கண்ட விளங்காய் போன்ற இப்பொருளால் தாம் எண்ணிய சுகபோகங்களைப் பெறுதலுங்கூடும்; மற்றும் பலர் இப்பொருளால் தாங்கற்கரிய துன்பநிலையை எய்தவுங்கூடும். நலமுந் தீங்கும் மதியுடன் பொருளைச் செலவிடும் திறனைப் பொறுத்திருக்கின்றது. செல்வம் தம்மிடம் சென்றடைவதன் முன்னர் அவர்கள் சுகமே வாழ்ந்திருத்தலும் கூடும்.

பாடுபட்டுப் பணத்தைத் தேடுதற்கும், ஆகூழால் பணத்தைக் கண்டெடுப்பதற்கும் வேற்றுமை மிகவுண்டு. ஒரு தொழிலைச் சிற்றளவில் தொடங்கி வளனுற்றவன் தொழிலின் வளர்ச்சியுடன் தானும் வளர்கின்றான்; அவன் மனநிலையும், உளப்பண்புகளும் சிறிது சிறிதாக அகற்சியுறுகின்றன. திடுமெனப் பெரும் பொருளை அடைந்தவனோ, பெருநிலைக் கேற்றவாறு பண்படாதிருக்கின்றான்; தனது எதிர்பாராத வாழ்க்கை மாறுதலால் திகைப்படைகின்றான்; தவறுபட்ட வழிகளில் பணத்தைச் செலவிடுகின்றான்; தவற்றினால் தீங்கு விளைந்தவழி விழிப்படைகின்றான்.

செல்வமும், வெற்றியும், அவற்றிற்கேற்ற பெற்றி பொறுப்புகளைத் தருகின்றன. பொறுப்புணர்ந்து, வாழ்க்கையை நடத்தும் திறமையுண்டேல், வாழ்க்கைப் பயனைமுற்றும் அடைந்தவராவோம். பொறுப்புணர்ந்தவழி இன்பப் பேற்றினைத் தரும்; பொறுப்புணராவழி துன்பியலை விளைக்கும்.

**த. வே. உ.**

உ

# தமிழ்ச்செய்திகள்

## கலைச் சொல்லாக்கம்

கலைச் சொற்களுக்கும் குறியீட்டுச்சொற்களுக்கும் நேர் சொற்களைக் காண்பதில் கருதவேண்டிய இயல்களைத் திட்டஞ் செய்தற்குச் சென்னை அரசியலார் ஒரு கழகம் அமைத்திருக்கின்றனர்.

உயர்தரப்பள்ளி வகுப்புகளில் மொழிப்பாட மொழிந்த ஏனைய பாடங்களை மாணவரின் தாய்மொழியில் பயிற்றுதல் நலமென, 1938-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அரசியலார் வெளியிட்டனர். கலைநூல்களைத் தாய்மொழியில் இயற்றும் வேலை முதன்மையாகி முன்னணியில் நின்றது. அனைவரும் ஒப்பத்தகுந்த குறியீட்டுச் சொற்கள், நூல்வழக்குக்கு ஏற்றவாறு ஆக்கப்படாதிருத்தல் பெருத்த இடராகவிருந்தது. கலைச்சொல் ஆக்கத்தை மேற்கொண்டு இதுகாறும் செய்தமுயற்சிகள், ஒருமித்து ஏற்றுவழங்கும் சொற்களை இயற்றமுடியாது கழிந்தன. கலைத்திறன் நிரம்பிய அறிஞர்களின் கழகம் அமைத்து ஆய்ந்து முடிப்பது நலமென அரசியலார் முடிவு செய்தனர்.

சென்னை மாகாணத்தில் கலைச்சொற்களையும், குறியீட்டுச் சொற்களையும் ஆக்குவதில் கருதவேண்டிய இயல்களை அமைக்க, மாண்புமிக்க V. S. சீனிவாசசாத்திரியார் அவர்கள் தலைமையில் திருவாளர்கள், Dr. C. R. ரெட்டி, R. M. ஸ்டேதம், ஸ்டாக், A. தானியேல், T. சூரியநாராயணன், வித்துவான். G. J. சோமயாஜி, மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினர் ஒருவர், N. வேங்கடராமையர், T. இராமபிசரோட்டி, திருமதிகவுசலியா, Rao Bahadur, M. C. S. அநந்தபத்மநாப ராவ், Dr. முகமது அப்துல் ஹக், V. இராசகோபாலையர், Prof. K. சாமிநாதன் ஆகிய பதினைவரையும் நியமித்திருக்கின்றனர்.

இவர்கள் கருதிமுடிக்கவேண்டிய பொருள்கள் :—

I. (a) இதுபோது குறியீட்டு அயன்மொழிச் சொற்களுக்கு நேர்சொல்லாக இங்கு வழங்கிவரும் சொற்களில் எவை எவை கல்விப்பயிற்சிக்கு ஏற்றவை?

(b) யாவரும் ஒப்புதற்குரிய சொற்கள் வழக்கில் இல்லாத வழி ஆங்கிலக் குறியீடுகளையே பள்ளிப் பயிற்சிக்குரியனவாய் வைத்துக் கொள்ளுதல் நலமா?

II. அல்லது, குறியீட்டுச் சொற்களுக்கு நேரான சொற்களைத் தென்னிந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் புதுவதாக அமைத்து அவற்றின் பட்டிகள் வெளியிடுவது இன்றியமையாததா?

III. நூலாசிரியர்கள், நூல்வெளியிடுவோர்கள் இவர்கட்கு மேலே குறித்த I, II பொருள்களைப்பற்றி எவ்விதமான கட்டளை அனுப்பலாம்?

இன்றியமையாதெனக் கண்டால் இக்கழகத்தார் விதிக்கும் பொதுவியல்களின்படி ஒவ்வொரு மொழியிலும் சொற்களமைக்க உட்கழகங்கள் அமைக்கவும் கூடும்.

மேலேகுறித்த கழகத்தில்ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் புலமை உள்ளவர்கள் நிரம்பியிருக்கின்றனர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தினர் சார்பில் வரும் ஒருவரும் வடமொழிப் பற்றுடையராகவே இருப்பர் எனக் கருதப்படுகின்றனர். தமிழ்மொழித் திறம் அறிந்த புலமைமிக்க கலைவாணர் ஒருவர், இருவரையேனும் அரசியலார் காணமாட்டாத ஏழைமைக்கு மிகமிக இரங்குகின்றோம். தமிழறியா மக்கள் வகுக்கும் கிளவியாக்க விதிகள் தமிழ் மக்கள் எள்ளி, ஒதுக்கத் தகுந்தனவாயிருக்கும் என்பது ஒருதலை. தாய்மொழியில் கலைநூல்களைக் கற்பிக்க முற்படும் அரசியல் அறிஞர்கள் தாய்மொழியில் குறியீடுகள் அமைப்பதை விடுத்து அயன்மொழியாகிய வடமொழியில் படைக்க முற்படுவது பயனில் உழவாகும். வழக்கிலுள்ள வடமொழிக் குறியீடுகள் பொருள் நிரம்பாதவை; பொருள் விளங்காதவை; தவறுபட்ட கருத்துடையவை. ஆங்கிலக் குறியீடுகளை விடுத்து, வடமொழிக் குறியீடுகளைத் தேடுவது மடமையின்பாற்படும்; நெல்லை விடுத்துக் கல்லைக் கறிப்பதாகும்.

தமிழ்நாட்டு மாணவர்கள், வடமொழியாளரின் கிளவியாக்கத்தால் குன்றுமுட்டிய குரீஇப்போலத் தடுமாற்ற முறுவர்; கலைபயில் தெளிவிழந்து மயங்குவர். தமிழ்மாணவர் இத்தகைய இன்னல்கட்காளாகாவண்ணம், தமிழறிஞர் கிளர்ச்சிகள்செய்து பாதுகாப்பாராக.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

Sir K. V. ரெட்டிநாயுடு அவர்கள் இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராய் அமர்த்தப்பெற்றது தமிழ்நாட்டின் பெரும்பேறெண மதிக்கப்பெறுகின்றது. தன்னலப் பெருக்கமே நாடும் வடமொழியாளரும், அக்கொள்கையில் உறைத்து நிற்கும் ஆனந்தவிகடன் போன்ற தாள்களும், திருவாளர் ரெட்டிநாயுடு அவர்களின் நல்வருகையைப் பொருமை இயற்கைதான். சிறப்பாகத் தமிழறிஞர்களும், பொதுவாகத் தமிழ்மக்களும் திருவாளர் ரெட்டிநாயுடு அவர்களின் ஆளுகையில் பல்கலைக்கழகம் பலநெறியிலும் சீர்திருத்தமுறுமெனஎதிர்பார்க்கின்றனர்; தமிழ்மொழி நன்கு பேணி வளர்க்கப்பெறுமெனவும், தமிழறிஞர்களின் உரிமைகள் பாதுகாக்கப் பெறுமெனவும் நம்புகின்றனர். தமிழ் நாட்டின் நன்மதிப்பிற்குரிய திருவாளர் ரெட்டிநாயுடு அவர்களைப் பல்கலைக் கழகத்தின துணைவேந்தராய் வரித்த செட்டிநாட்டு மன்னர் அவர்களைத் தமிழ்நாடு வாயார வாழ்த்துகின்றது; தமிழறிஞர் நன்றியொடு போற்றுகின்றனர்.

## இராமகிருட்டினர் வித்தியாலயம் கோயம்புத்தூர்

திருவாளர், T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களின் (M.L.A.Central) நன்முயற்சியால் இக்கல்லூரி தோற்றம்பெற்று, பத்து ஆண்டுகளாய்ப் பிறைமதிபோல் வளனுற வளர்ந்து வருகின்றது. ஆசிரியன்மார்களுடன் மாணவர் வதியவும் கல்வி பயிலவும் தக்க வசதிகள் அமைக்கப்பெற்றுள்ளன. மாணவர் இளம்பருவத்தே எளியவாழ்க்கையில் பயிலவும், உயர்ந்த நோக்கத்தைத் தமது உளத்தேகொள்ளவும்இது சிறந்த கருவியாயிருக்கின்றது. உடலின்வன்மை,மனத்தின்உறுதி,அகத்தும்புறத்தும் தூய்மையான சமயநெறி, பரந்த உள்ளம், தொண்டில்உறைப்பு ஆகிய நற்பண்புகள் வாய்க்குமாறு பயிற்றப் பெறுகின்றனர். சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறு வண்ணம் பாதுகாக்கப் பெறுகின்றனர். ஒரளவு நைத்தொழிலும் பயிலுகின்றனர். S. S. L. C. தேர்வுக்கான வசதிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

இத்துணைச் சீரியமுறைகளில் மாணவர்களைப் பயிற்றிவரும் கல்வி நிலையம், தமிழ் மொழிக்கும், தமிழர் நெறிக்கும் ஆக்கந் தருதற்கான நெறிமுறைகளைக் கைக்கொள்ளுதல் சால்புடைத்தாகும்.

தமிழன்பரின் ஆதரவும் இறைவன் திருவருளும் வாய்ப்புடன் அமைவதாக.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்

**திருஞானசம்பந்தர் திருநாள்:**-கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் இத்திருநாள் சிறப்புடன் நடந்தது. வித்துவான், A. R. **முத்தையபிள்ளை** அவர்கள் சம்பந்தப்பெருமானது வரலாற்றை விளக்கினார்கள். அதன்மேல் திருமறைக்காடு, திருவாளர், **அருணாசலதேசிகர்** அவர்கள் பல்லியச் சார்புகளுடன் தேவாரத் திருப்பாடல்களை அன்புகனிய ஓதி அன்பர்களை மகிழ்வித்தனர்.

## பிழை திருத்தம்

பொழில் துணர் 16, மலர் 2.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 49 | 19 | புறநாநூறு | புறநானூறு |
| ,, | 23 | தோன்றுகின்றது | தோற்றுகின்றது |
| 50 | 2 | அறியவும் | அரியவும் |
| ,, | 27 | பிற்காலத்தாற்... | பிற்காலத்தார்... |
| | | பிரித்தாற்போலும் | பிரித்தார்போலும் |
| 51 | 10 | ஆவயின் அகாம் | ஆவயின் னகரம் |
| 52 | 12 | அர், மேல், கள்'' | 'அர்', 'மேல்',' 'கள்', |
| ,, | 20 | நற்றிளை | நற்றிணை |
| '' | 27 | வைப்பு | வரைப்பு |
| 53 | 5 | மயிலுருக் | மயிலூருங் |
| ,, | 6 | நிற்பாற்கள் | நிற்பார்கள் |
| ,, | 25 | என்கோ | ஙங்கோயே |

# நன்கொடைகள்

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. V. கோவிந்தசாமிநாயுடு அவர்கள் கரந்தை. | | | | |
| ,, தமது மகன், மகள் திருமணம் | | 15 | 0 | 0 |

## புலவர் கல்லூரிக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ,, K. மனத்துணைநாத தேசிகர் வலிவலம் நெல் 24 கலம் | | | | |
| ,, கதிர்வேல்பிள்ளை | தஞ்சை | 5 | 0 | 0 |
| ,, A. சிதம்பரநாதன் செட்டியார்வழி :— | | | | |
| ,, S. சுப்பராயன் | குடந்தை | 1 | 0 | 0 |
| ,, சு. சு. ச. கும்பலிங்கஞ்செட்டியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, P. T. S. குமரசாமிசெட்டியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, K. T. பழமலைப்பிள்ளை | அண்ணாமலைநகர் | 1 | 0 | 0 |
| ,, பெரியநாயகி சிதம்பரநாதர் | ,, | 1 | 0 | 0 |
| ,, P. R. மீனாட்சிசுந்தரம் B.A. (Hon's) | புதுக்கோட்டை | 1 | 0 | 0 |
| ,, நா. கந்தசாமிபிள்ளை வழி:— | | | | |
| ,, நா. கந்தசாமிபிள்ளை | தஞ்சை | 23 | 0 | 0 |
| ,, பட்சி ரெங்கய்யா | ,, | 5 | 0 | 0 |
| ,, T. S. நாராயணசாமி அய்யர் | ,, | 5 | 0 | 0 |
| ,, T. A. சிவசங்கரம்பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, த. வே. உ. அவர்கள் வழி:— | | | | |
| ,, இராம. கும. சு. குமரப்பச்செட்டியார், | பலவான்குடி | 300 | 0 | 0 |
| ,, A. இரத்தினசபாபதி பிள்ளை, | பெண்ணாகடம் | 3 | 0 | 0 |

## க. த. ச. கல்லூரிக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ,, அ. நே. அ. ஜினகுமார முதலியார், | கரந்தை | 0 | 8 | 0 |

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.